பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 24 வியாழக்கிழமை (10.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 349

## யாழ். கைலாசபதி கலையரங்கில் நாளை மாணவர் எழுச்சி மாநாடு

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஏற்பாடுசெய்துள்ள மாணவர் எழுச்சி மாநாடு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த மாநாட்டில் தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மாணவர்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டியதன் தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்படும் என்றும் -

பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சுமார் ஆயிரத்து 500 மாணவர்கள் இந்த மாநாட்டில் அணிதிரள்வர் என்றும் - கூறப்பட்டது.

இந்த மாநாடு தொடர்பான செய்தியாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் மணல் அணை அருகே ஏழாலையில் 2 எலும்புக் கூடுகள் மீட்பு

ஏழாலை,நவ.10

ஏழாலை மேற்கில் படையினர் அமைத்திருந்த மணல் அணைக்குச் சமீபமாகவிருந்து நேற்று மாலை இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ஏழாலை மகாவித்தியாலயத்துக்குச் சமீபமாக-வடலியடிப் பகுதியில் உள்ள தனியார் காணியில் இருந்து இவை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீடு அழிக்கப்பட்டு நீண்டகாலமாக பாவனையின்றியிருந்த தமது காணியில் வேலியை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் தமது காணியின் ஒரு பகுதியில் - படையினரால் நிறுவப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இருந்த மணல் அணையை அகற்றினார் என்றும் -

அந்தவேளை, மணல் அணையின் ஓரமாக வெட்டிய போது இரண்டு எலும்புக் கூடுகள் இருப்பதை அவர் கண்டுபிடித்தார் என்

(14ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் பட்ஜெட் குறித்து பிரதமர் கடும் அதிருப்தி!

## 'மஹிந்தவின் சிந்தனைகள்' புறக்கணிப்பு எனச் சீற்றம்

கொழும்பு, நவம்பர்10

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தாம் முன்வைத்த 'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாம் தெரிவித்த யோசனைகள் அரசாங்கத்தின் வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படாமை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடும் அதிருப்தி கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

ஜனாதிபதித்தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பல யோசனைகள் வரவு - செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சரிடம் கூறியிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

இதற்கமைய பெருமளவு நிவாரணங்கள், சலுகைகள், மானியங்கள் இந்த வரவு - செலவுத் திட்ட யோசனைகளில் உள்ளடக்கப்படவிருந்தன. ஆனாலும், அப்படிச் சேர்ப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடும் ஆட்சேபனை தெரிவித்திருக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க சமாதான செய...கத்தின் பணிப்பாளர் தனபால ராஜினாமா!

கொழும்பு, நவ.10

அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் பதவியிலிருந்து ஜயந்த தனபால ராஜினாமா செய்துள்ளார்.அதையடுத்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கீழ் கடமையாற்றிய - அவருக்கு நெருக்கமான - உயர் மட்ட - அதிகாரிகள் பலர் அடுத்துவரும் தினங்களில் தமது பதவிகளை ராஜினாமா செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலையடுத்து அமைதி முயற்சிகளை மேற்கொள்வதற்கான பணியில் புதிய ஒருவருக்கு இடமளிக்கும் வகையில் ஜயந்த தனபால தமது பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார் எனவும் அவரின் ராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுவிட்டார் எனவும் சமாதான செயலக

(14ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸின் அலுவலகத்துக்கு அருகில் நடமாடிய இருவர் கைது

கொழும்பு, நவ.10

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பார்க் வீதி அலுவலகத்தின் முன்னால் சந்தேகத்திற்குகிடமான முறையில் நடமாடிய இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஆறு மணியளவில் இரு இளைஞர்களும் நுவரெலியா பகுதியைச் சேர்ந்தவர்களென ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விடயத்தில் 8 கோடி ரூபா தவறாகக் கையாளப்பட்டுள்ளது

### குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பணிப்பாளர் மன்றில் சத்தியக்கடதாசி

'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' விவகாரத்தில் 8 கோடி 20 இலட்சம் ரூபா அரச நிதி தவறாகக் கையாளப்பட்டிருக்கிறது என்றும், நம்பிக்கை மோசடியான கிரிமினல் தவறு இழைக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரியவந்திருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் விசாரணையில் கிடைத்திருக்கின்றன.

இத்தகைய சாரப்படக் கருத்துகள் அடங்கிய சத்தியக் கடதாசி ஒன்றை குற்றப்புலனாய்வுப் பிரிவின்பணிப்பாளரான பிரதிப் பொலீஸ்மா அதிபரான லயனல் குணதிலக நேற்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

'ஹெல்பிங் அம்பாந்தோ...டை' நிதி மோசடி விவகார விசாரணைக... இடைநிறுத்துமாறு உத்தரவிடக்கோரி ...ரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாகவே,அந்த வழக்கின் இரண்டாவது எதிர்மனுதாரரான பிரதிப் பொலீஸ்மா அதிபரான லயனல் குணதிலக இந்த சத்தியக் கடதாசியை நேற்றுத் தாக்கல் செய்தார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

கடந்த ஜூலை 18ஆம் திகதி கபீர் காஸிம் எம்.பியால் செய்யப்பட்ட எழுத்து முறைப்பாட்டின்மூல அடிப்படையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்த விசாரணைகளை நாம் மேற்கொண்டோம்.

ஜனாதிபதி செயலக சுற்று நிருபங்களை மீறும் விதத்தில் அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டது என்பது எமது விசாரணைகளில் தெரியவந்தது.

8 கோடி 20 லட்சம் ரூபா நிதி தேசிய இடர் நிவாரண நிதியத்துக்கு மாற்றப்படும்வரை தவறான முறையில் கையாளப்பட்டிருக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசு முன்வைத்த 'பட்ஜெட்' தானாகவே காலாவதியாகிறது!

### சுட்டிக்காட்டுகின்றார் ஐ.தே.கட்சி எம்.பி கபீர் காஸிம்

கொழும்பு, நவ.10

நேற்றுமுன்தினம் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம், நாடாளுமன்றம் மீண்டும் நவம்பர் 20ஆம் திகதி கூடும்போது இயல்பாகவே காலாவதியாகிவிடும். அப்போது ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் சட்டரீதியான வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும். அதன்மூலம் நாட்டு மக்களுக்குப் பல்வேறுவிதமான விமோசனங்கள் கிடைக்கும்.

இப்படி உறுதியாகக் கூறுகிறார் ஐ.தே.க. கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கபீர் காஸிம்.

இலங்கையிலும் சரி, சர்வதேச நாடாளுமன்ற விதிகளின்படியும் சரி, வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஐந்து நாள்களுக்குள் அது தொடர்பான விவாதம் ஆரம்பிக்கப்படவேண்டும். அதன்பின் ஏழுதினங்களில் வாக்களிப்பு நடத்தப்பட்டு நாடாளுமன்றின் அங்கீகாரத்தை அது பெறவேண்டும். அது

(14ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைக் கோட்டிலிருந்து 1 கிலோமீற்றர் தூரத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைக்குக!

### உயர் நீதிமன்று நேற்று உத்தரவு

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி, அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதி வாக்காளர்கள், அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து வாக்களிப்பதற்காக அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை, கட்டுப்பாட்டு எல்லையிலிருந்து ஐந்நூறு மீற்றருக்குப் பதிலாக ஒரு கிலோ மீற்றர் தூரம் உள்ளேயாக அமையுங்கள்.

- இவ்வாறு உத்தரவிட்டிருக்கின்றது உயர் நீதிமன்றம்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த இரு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பாகவே உயர்நீதிமன்றம்

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலை நிராகரித்து வாக்குகளைச் செல்லுபடியற்றதாக்குங்கள்

## பொதுமக்களிடம் புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள்

கொழும்பு,நவ.10

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நிராகரித்து வாக்குகளைச் செல்லுபடி அற்றவையாக்கும்படி பொதுமக்களிடம் புதிய ஜனநாயகக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அக்கட்சி வெளியிடுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைப் பேரினவாத ஒடுக்கு முறை யுத்தமாக மாற்றப்பட்டு வடக்கு - கிழக்கு மக்கள் மீது திணிக்கப்பட்டது. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் வரையான மக்கள், இளைஞர், யுவதிகள் கொன்றொழிக்கப்பட்டனர். இருப்பிடங்களும் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களும் வாழ்வாதாரங்களும் அழிக்கப்பட்டு பல லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டனர். இவை அனைத்தையும் ஜனாதிபதி ஆட்சி முறையே வழி வகுத்து முன்னெடுத்துவந்துள்ளது.

பேச்சுவார்த்தை மூலமாகத் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டு காலம் கடத்தப்பட்டு வந்ததே தவிர சுய நிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு - கிழக்கிற்கான சுயாட்சி அதிகாரப் பகிர்விற்கு ஜனாதிபதி ஆட்சிக் கதிரையில் அமர்ந்த எவருமே முன்வரவில்லை.

நாட்டின் மூல வளங்களைப் பயன்படுத்தி பல்துறை அபிவிருத்தியை முன்னெடுக்கக் கூடிய தேசிய பொருளாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. அதேவேளை, உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வர்த்தக அமையம் போன்றவற்றின் ஆலோசனை வழிகாட்டலில் தாராளமயம், தனியார்மயம் என்பன உலகமயமாதல் என்ற ஏகாதிபத்திய நிகழ்ச்சிநிரலாக ஜனாதிபதி ஆட்சி முறையின் மூலம் அறிமுக்கப்படுத்தப்பட்டு யுத்தத்தின் மறைவிலே மறுகொலனித்துவமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

தாராளமயத்தின் மூலம் விவசாயமும் கைத்தொழில்களும் நாசமாக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்தியாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டனர். அரசாங்க பொதுக் கூட்டுத்தாபன நிறுவனங்கள் பல்தேசிய கொம்பனிகளுக்கு தாரைவார்க்கப்பட்டன. எஞ்சியுள்ளவைகளையும் தனியார் மயப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் தொடர்கின்றன. அழிவு தரும் திட்டங்களான் மலையக மேல் கொத்தலைத்திட்டம், புத்தளம் நுரைச்சோலை அனல் மின்திட்டம் என்பனவும் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கிற்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய சேதுசமுத்திரக் கால்வாய்திட்டம் பற்றி எதிர்ப்போ கண்டனமோ தெரிவிக்காது ஆளும் தரப்பில் மௌனம் காக்கப்படுகிறது. இவை அனைத்திற்கும் ஜனாதிபதி ஆட்சி முறைமையே தலைமை தாங்கி நிற்கின்றது.

அன்றாட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வுகள், சேவை - போக்குவரத்துக் கட்டண உயர்வுகள் போன்றவற்றால் நாளாந்த வாழ்க்கைச் செலவுகள் வானத்தை நோக்கி விரைந்த வண்ணம் உள்ளன. அதனால், நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரசாங்க தனியார்துறை ஊழியர்கள், உத்தியோகர்தர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் பாரிய பொருளாதாரச் சுமைகள், நெருக்கடிகளால் அமுக்கப்பட்டுவருகின்றனர். இவற்றுக்கு ஜனாதிபதி ஆட்சிமுறையால் தீர்வு எதனையும் காண முடியவில்லை.

- இவ்வாறு நாட்டிற்கும் உழைக்கும் அனைத்து மக்களுக்கும் தமிழ்த் தேசிய இனம் உட்பட முஸ்லீம் மலையகத் தமிழ் தேசிய இனங்களுக்கும் சுமைகள், பிரச்சினைகள் நெருக்கடிகள் யுத்தக் கொடுமைகள் ஜனநாயக மனித உரிமை மறுப்புகள் மற்றும் சமூக அநீதிகள் விளைவித்து வந்தது இந்த ஜனாதிபதி ஆட்சி முறைமையேயாகும். அதேவேளை, சொத்து சுகம் படைத்த மேட்டுக்குடி உயர் வர்க்க சத்திகளுக்கும் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அவர்களது பல்தேசியக் கொம்பனிகளுக்கும் சேவை செய்வதில் முதலாளித்துவப் பேரினவாத ஆளும் வர்க்கப் பிரதிநிதியாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிக் கதிரையில் ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுத்நதிரக் கட்சியினதும் ஜனாதிபதிகள் தொடர்ந்து அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர். அதனால், சாதாரண உழைக்கும் மக்கள் எவ்வித விமோசனங்களையும் பெறவில்லை. எனவே, இத்தகைய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் நவம்பர் 17இல் நடைபெறவுள்ள தேர்தலை அனைத்து மக்களும் நிராகரிக்க வேண்டும் என்ற அறை கூவலை எமது புதிய ஜனநாயகக் கட்சி விடுக்கின்றது. மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் வண்ணம் வாக்குச் சீட்டை செல்லுபடியற்றதாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வடமராட்சியில் பலப்படுத்தப்படும் காப்பரண்கள்

கரவெட்டி,நவ.10

வடமராட்சியில் இராணுவத்தினரின் கரையோரக் காவல் அரண்கள் பலப்படுத்தப்பட்டுகின்றன.

இக் காப்பரண்கள் மண் மூடைகள் அடுக்கப்பட்டுப் பலப்படுத்தப்படுவருகின்றன.

மேலும் இரவு பகலாக அதிக எண்ணிக்கையில் படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

(ஒ-70)

# துணுக்காயில் துரித மீட்டல் வகுப்பு

துணுக்காய்,நவ.10

துணுக்காய் வலயக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நான்கு பாடசாலைகளில் துரித மீட்டல் வகுப்புக்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

ஒட்டுசுட்டான் ம.வி., மாங்குளம் ம.வி., பாலிநகர் ம.வி., மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய கல்லூரிகளில் நடத்தப்பட்டுவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சுமார் 500 மாணவர்கள் பங்குபற்றிவருகின்றனர்.

மேற்படி மாணவர்களுக்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ள முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் அறிவித்துள்ளார். (எ)

# தனியார் மினிபஸ் தரிப்பிடம் இம்மாத இறுதியில் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ். குடாநாட்டில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற மினிபஸ்களுக்காக முற்றவெளிப்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் தனியார் மினிபஸ் தரிப்பிடம் இம்மாத இறுதியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இத்தகவலை யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற மினிபஸ்கள் இந்த மின்பஸ் தரிப்பிடம் இல்லாமையால் வீதிகளிலேயே நிறுத்தப்பட்டுவருகின்றன. இதன்காரணமாக வீதிகளில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன.

யாழ். மாநகரசபை இதனைக் கவனத்தில் எடுத்து மினிபஸ் தரிப்பிடம் ஒன்றை யாழ். முற்றவெளிப் பகுதியில் அமைத்துவருகின்றது.

இப்பணிகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டுத் தரிப்பிடம் திறந்துவைக்கப்படவுள்ளது.

மினிபஸ் தரிப்பிடத்திற்கு வருவதற்கு மினிபஸ்கள் காங்கேசன்துறைவீதியையும் அங்கிருந்து வெளியேறுவதற்கு முனீஸ்வரன் வீதியையும் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முனீஸ்வரன் வீதியில் தற்போது நடைபாதை வியாபாரக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. நடைபாதை வியாபாரிகளுக்கு வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகில் அங்காடி வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. அவற்றின் வேலைகளும் இம்மாத இறுதிக்குள் பூர்த்திசெய்யப்பட்டுவிடும். இதன்பின்னர் முனீஸ்வரன் வீதியில் உள்ள வியாபாரா நிலையங்கள் முற்றாக அகற்றப்படும் - என்றார்.

(8-7)

# வீதி ஒழுங்கை மீறிய மோ.சைக்கிள்களை தம்முடன் எடுத்துச் சென்ற பொலீஸார்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ். நகரப்பகுதியில் வீதி ஒழுங்குகளை மீறி நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை பொலீஸார் நேற்றுத் தம்முடன் எடுத்துச்சென்றனர்.

நகரப்பகுதியில் குறிப்பாக ஆஸ்பத்திரி வீதியில் வீதி ஒழுங்குகளை மீறியும் வாகனங்கள் நிறுத்தவேண்டாம் என்று அறிவுறுத்தல்டிருந்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவே இவ்வாறு பொலீஸாரால் ஏற்றிச் செல்லப்பட்டன என்று கூறப்பட்டது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் ஆஸ்பத்திரி வீதியில் போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபட்ட பொலீஸார் இத்திடீர் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று புலிகளுடன் பேச்சு

## கிளிநொச்சியில் முற்பகல் சந்திப்பு

கொழும்பு, நவ. 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான கலந்துரையாடலொன்று இன்று நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதான செயலகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும், அதில் தமிழர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை குறித்தும் இங்கு கலந்துரையாடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-க)

# தெற்காசிய அரசியல் தலைவர்களிடம் பிரியாவிடை பெறுகிறார் சந்திரிகா!

## சார்க்கில் பங்குபற்ற இன்று அவர் புறப்பாடு

கொழும்பு,நவ.10

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெற்காசியாவின் அரசியல் தலைவர்களை இறுதியாகச் சந்தித்துப் பேசவுள்ளார்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்று இலங்கையிலிருந்து புறப்படவுள்ள ஜனாதிபதி அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்,பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் மற்றும் பல முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார்.

தமது பதவிக்காலத்தில் தமக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக தெற்காசியத் தலைவர்களுக்கு ஜனாதிபதி இந்த சந்திப்பின்போது நன்றி தெரிவித்து விடைபெறவுள்ளார் எனக் கூறப்பட்டது.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, வெளியுறவுத் துறை செயலர் பலிஹக்கார ஆகியோரும் செல்லவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)



இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையில் அண்மையில் தங்க நகை அடைவு சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள் கிளையின் முகாமையாளர் க.கனகசபையினால் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் நகை அடைவு சேவையை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (எ)

# வாக்காளர் அட்டைகள் மீசாலையில் பறிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணம் மீசாலைப் பகுதியில் இனந்தெரியாத குழுவால் ஒருதொகுதி வாக்காளர் அட்டைகள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

வீடுகளுக்கு வாக்காளர் அட்டைகளை விநியோகித்துக் கொண்டிருந்த சமயம் மீசாலைப் பகுதியில் இருவேறு இடங்களில் வைத்து 259 வாக்காளர் அட்டைகள் இனந்தெரியாதோரால் அபகரித்துச் செல்லப்பட்டன.

இதுகுறித்து தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட வாக்காளர் அட்டைக்குரிய வாக்காளர்களை வாக்களிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(எ-74)

# மாணவர் எழுச்சியின் மற்றொரு பரிமாணம்
# தமிழர் தாயகத்தின் முதல் மாணவர் மாநாடு

தமிழர் தாயகத்தின் முதல் மாணவர் மாநாடானது நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற வுள்ளது. இதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

தமிழர்களின் இலட்சிய விடுதலைப் போராட்டத்திற்காக பல்வேறு காலகட்டங் களில் வேராகவும் விழுதாகவும் நின்று மாணவர்கள் ஆற்றிவரும் பங்களிப்புகள் தமிழர் விடுதலைப்போராட்ட வரலாற்றில் போற்றப்பட வேண்டியனவாகும். இருந்த போதிலும் இனவாத அரசு தன் கறை படிந்த கரங்களினால் தமிழ் மாணவர்களின் குரல் வளையாக விளங்குகின்ற கல்வியினை நசுக்கும் வகையில் செயற்படுகிறது. தற் போதைய சமாதானச் சூழ்நிலையிலும் கூட சிங்கள இராணுவமானது தமிழ் மாணவர் மீது மறைமுகமான உளவியல் யுத்த மொன்றை நடத்திவருகின்றது. அந்த வகை யில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற நெருக் கடிகளினை ஆராய்வதற்கும் அவற்றினை எதிர்காலத்தில் அகற்றுவதற்கான நடவடிக் கைகளினை எடுப்பதற்காகவே நாளை மாண வர் மாநாடு கூட்டப்படுகின்றது.


### நெருக்கடிகள்

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக எமது தாயகத்தில் நடைபெற்ற யுத்தத்தினாலும் யுத்தத்தால் நிகழ்ந்த இடப் பெயர்வுகளினாலும் உண்டான விளைவுக ளினை தமிழ் மாணவர் இன்று வரை அனு பவித்து வருகின்றனர். கடந்த காலங்க ளிலே அப்பாவித் தமிழ் மாணவர்கள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டதும் சிங்களக் காமுகர் களின் உடற்பசிக்கு தமிழ் மாணவிகள் இரையாகிப் போனதும் குறிதவறிய தாக் குதல் என்ற போர்வையில் பாடசாலை மாணவர் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்களும் மாணவர்களின் மனங் களில் ஆழப்பதிந்த வடுக்களாக ஆகிவிட் டன.

யுத்தமோ சமாதானமோ அற்ற இன் றைய சூழ்நிலையில்கூட தமிழ் மாணவர் களின் மீது சிங்களப்பேரினவாத அரசானது நிழல் யுத்தமொன்றை நிகழ்த்தி வருகின் றது. தமிழர் தாயகத்திலே இன்றும் பல பாடசாலைகள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்தப்பாடசாலை களில் கல்விகற்ற மாணவர்களில் பலர் தமது கல்வி நடவடிக்கையினைத் தொடர முடியாத நிலையில் இடைவிலகித் தொழில் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் கள். அத்தோடு, உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் தமது சொந்த இடங்க ளிற்கு திரும்பிச்செல்ல முடியாத நிலையில் முகாம்களில் தங்கியிருந்து கல்வியினைத் தொடரும் மாணவர்களும் பல்வேறு நெருக் கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மீதியாகவுள்ள பாட சாலைகளிற்கு அருகிலும் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் அதிலும் குறிப்பாக பெண்கள் பாடசாலை களுக்கு அருகில் நிலக்கீழ் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளமையுமானது தமிழ் மாணவர்களின் அமைதியான கல்வி நடவடிக்கைக்கு வேட்டுவைக்கும் முயற் சிகளாகவே கருத வேண்டியுள்ளது. இது தவிர தமிழர் தாயகத்தில் மாணவர்களின் எழுச்சி நிகழ்வுகளின் போதும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் போதும் ஸ்ரீலங்காப் படையினர் தமது அடாவடித்தனமான அடக்குமுறைகளினை மாணவர்கள் மீது பிரயோகிக்கின்றார்கள். குறிப்பாக 2000ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட யாழ்.இந் துக் கல்லூரி மாணவன் சஞ்சீவன், 2005ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட யாழ் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மாணவி துளசிகா ஆகியோரின் படுகொலை களை அடுத்து இடம்பெற்ற அசம்பாவிதங் களின் போது பல மாணவர்கள் கடுமை யாகத் தாக்கப்பட்டும் கைதுசெய்யப்பட்டும் இருந்தனர். இதுதவிர 2003ஆம் ஆண்டு யாழ்.இந்துக் கல்லூரி வளாகத்தில் இடம் பெற்ற மாணவர் எழுச்சி நாள் நிகழ்வு களை நடத்த விடாமல்தடுக்கும் பொருட்டு அதனை ஏற்பாடு செய்தவர்களுக்குக் கொலை அச்சுறுத்தலும் விடுத்தனர். இதேபோல

பாடசாலை அருகே இராணுவ முகாம்



எழுச்சி நிகழ்வில் மாணவர் சக்தி...



2005 இல் நடைபெற்ற மாணவர் எழுச்சி, பொங்குதமிழ் நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் கலந்து கொள் ளக்கூடாது என அதிபர்களுக்கு படைத் தரப்பால் அச்சுறுத்தல் விடப்பட்டிருந்ததும் இங்கு நினைவு கூறத்தக்கவை.

மற்றொருபுறம் ஸ்ரீலங்கா இராணுவமா னது தான் ஆக்கிரமித்து வைத்துள்ள தமி ழர் தாயகப் பிரதேசங்களில் எமது கலா விழுமியங்களை நலிவடையச் செய் வதனூடாக தமிழ் மாணவர்களின் கல்வி மட்டத்தினை வீழ்ச்சியடையச் செய்யும் நோக்குடன் சலுகைகள் என்ற பேரில் சமூகவிரோதிகளின் துணையுடன் மாணவர் சமூகத்தை சதிவலைக்குள் சிக்கவைக்கும் முயற்சியில் முனைப்புடன் செயற்பட்டு வரு கின்றது.

### எழுச்சிப் பிரகடனம்

கடந்த 2002, 2003 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தமிழர் தாயகத்தில் மாணவர் எழுச்சி நிகழ்வுகளின் போது 'நிலங்காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்' என் பதனை வலியுறுத்தி பல்லாயிரக்கணக் கான பாடசாலை மாணவர்கள் அணி திரண்டு எழுச்சிக் கோசமிட்டனர் இங்கு வெளியிடப்பட்ட எழுச்சிப் பிரகடனத்தில் மாணவர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று சுதந்திரமாகக் கல்வி கற்பதற்குப் படையினர் தடையாக உள்ள னர் என்றும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமது பாடசாலை களினை ஆக்கிரமித்திருக்கும் படையினர் உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மாணவர் கல்வி உரிமைகளினை மதித்து நடக்க வேண்டும் எனவும் அதில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருந்தது. இருந்தபோதும் சிங் களப் பேரினவாதிகள் தமிழ் மாணவர் களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வுகளையோ அல்லது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையோ எடுக்கவில்லை என் பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய தாகும்.

தமிழ் மாணவர்களுக்கு சுதந்திரமான தும் அமைதியான கல்வியினை பெற்றுக் கொடுப்பதற்காகவும் மாணவரை இராணு வத்தினரின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப் பதற்காகவும் இராணுவ ஆக்கிரமிப்புகளி னால் பாடசாலைக் கல்வியினை இழந்த மாணவர்களுக்கு மீள் கல்வியினை பெற் றுக் கொடுப்பதற்காகவுமே மாணவர் ஒன்றி யம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தவகையில் ஆண்டாண்டு காலமாக ஆட்சி நடத்தி வரும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர் கள் தமிழ் மாணவர்களின் கல்வி உரிமை யினை நசுக்கும் வகையில் செயற்படுவ தினை சர்வதேச சமூகத்திற்கு வெளிக் காட்டுவதற்காகவும் தமிழ் மாணவர் மீதான சிங்களப்படையினரின் கொலை வெறிக் கலாசாரம் எதிர்வரும் காலங்களில் நடை பெறாமல் தடுப்பதற்குமான நடவடிக்கை களில் தமிழ் மாணவர் ஒன்றியமானது அதிக கரிசனையோடு செயலாற்றி வருகின்றது. இந்த நிலையில்தான் இன்றைய காலகட் டத்தில் தமிழ் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சனைகளினையும் அவற்றினை அகற் றுவதற்கான வழிமுறைகளினையும் ஆரா யும் பொருட்டு இந்த மாநாட்டினை தமிழ் மாணவர் ஒன்றியமானது கூட்டுகின்றது.

### மாணவர் மாநாடு

விடுதலையின் விளிம்பில் நிற்கும் ஒரு இனத்தின் இளையசக்தி மாணவர்கள். அவர்கள் தாங்களாகவே ஒன்றுகூடி தாம் எதிர்நோக்கும் சவால்களைப் பற்றி ஆரா யவுள்ளனர் என்ற வகையில் இந்த மாநாடா னது அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக அமையவிருக்கின்றது. ஏனெ னில் இதுவரை காலமும் தமிழர் தாயகத் திலே எமது சுயநிர்ணய உரிமையினை

ச.நிலக்ஷன்
இலங்கை இளைஞர் நாடாளுமன்றம்

வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட பேரெழுச் சிகளின் வெற்றிக்கும் சிங்களப் பேரினவாத சக்திகளின் அடக்கு முறைகளுக்கும் எதி ராக முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட் டங்களின் வெற்றிக்கும் பாடசாலை மாண வர்கள் பெரும் பங்காற்றியிருந்தனர். அவ் வாறான பலம் மிக்க மாணவர் சக்தியின் பிரதிநிதிகளை ஒன்றுகூட்டி இம்மாணவர் மாநாடு நடத்தப்படுகிறது.

இதற்காக யாழ்.மாவட்டத்தில் உள்ள உயர்தரப் பாடசாலைகளின் ஒன்றியங்கள் மாணவர் முதல்வர் சபை ஆகியவற்றினை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் ஒன்று கூடவுள்ளனர். இவர்கள் தாம் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற மாணவர் சமூக மானது எதிர்நோக்குகின்ற கல்வி, வறுமை, இராணுவ நெருக்கடிகள் மற்றும் சுனாமி யின் பின்னரான மாணவரின் கல்விநிலை தொடர்பாகவும் அவற்றினை அகற்றுவதற் கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆராய வுள்ளனர். இந்த மாநாட்டிற்கு மாணவரின் நலனை மையமாகக் கொண்டு செயற்படு கின்ற அரசசார்பற்ற தனியார் தேசிய மற் றும் சர்வதேசப் பொதுத் தொண்டு நிறுவ னங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வுள்ளனர்.

இந்த மாநாடானது மாணவர் சமூகத் தினைப் பலவீனமடையச் செய்ய நினைக் கும் சிங்கள தேசத்திற்கும் அவர்களின் பிரச்சினை தொடர்பில் பாராமுகமாக இருக் கும் சர்வதேசத்திற்கும் நல்ல படிப்பினை களினை புகட்டும் என்பது உண்மையா கும்.

---

## சாயி சிந்தனை



### உணவைப் போன்றே மனம்

இறைவனின் பக்தர் என்று சொல்லிக்கொள்பவர் மாமிசம் சாப்பிடுவதை அறவே நிறுத்த வேண்டும்! காரணம் மாமிச உணவு மிருக குணத்தை வளர்க்கிறது! எப்படி உணவோ அப்படியே மனம்! ஆகையால் முதலில் மாமிசத்தை நிறுத்த வேண்டும்.

அது மட்டுமல்ல மாமிசம் சாப்பிடுவதற்காக நீ ஒரு மிரு கத்தைக் கொல்வது எத்தனைபாவம்! பஞ்ச பூதங்களால் நிறைந்த மனிதன் அதே பஞ்சபூதங்களால் ஆன மிருகத்தை வதை செய்வது என்ன நியாயம்? இவ்வாறு செய்வதால் உங்களுக்குக் கவலை தான் மிஞ்சுகிறது! ஆகையால் உண்மையான பக்தர்கள் மாமிச உணவை விலக்குங்கள் நான்சாயி பக்தர், ராம பக்தர், கிருஷ்ண பக்தர் என்று சொல்லிக்கொண்டு மாமிச உணவு சாப்பிடுகிறார்கள்! அவர்கள் எப்படி பக்தர்களாக இருக்க முடியும். அவர்கள்வெறும் அரக்கர்களே எப்படி அவர்களுக்குக் கடவுள் அருள் கிடைக்கும்? அதனால் வெளிநாட்டவர் ஆயினும் சரி! இந் நாட்டவர் ஆயினும் சரி! இறை பக்தர்கள் உடனே மாமிச உணவு உண்பதை நிறுத்த வேண்டும்! *ஆதாரம்: சனாதன சாரதி*

## மருதங்கேணியில் அமைக்கப்பட்ட வீடுகளின் கட்டுமானப்பணி நிறைவு

யாழ்ப்பாணம்,நவ.10

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பருத்தித்துறை, மருதங்கேணிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 230 நிரந்தர வீடுகளின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள் ளன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.பருத்தித்துறைப் பிரதேச செய லர் பிரிவில் தொண்டு நிறுவனங்களால் 37 வீடுகளும் வங்கியினால் வழங்கப்பட்ட மானியத் தினால் 172 வீடுகளும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் வங்கி வழங்கிய மானியத்தால் 21 வீடுகளுமாக மொத்தம் 230 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கென குறிப்பிட்ட சில இடங்களில் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு, சம்பந்தப்பட்ட மக்களும் உடனுழைத்தால் கட்டுமானப் பணி விரைவில் நிறைவு பெறும். பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் விரைவில் வீடுகள் அமைத்து வழங்கப்படும் என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஓ-204-202)

## தொழில் வாய்ப்புக்கான திட்டங்களை குடாநாட்டில் அமுல் செய்ய முடியாத நிலை

யாழ்ப்பாணம்,நவ.10

போர் காரணமாக குடாநாட்டில் நீண்ட காலமாகத் தொழிற்சாலைகள் மூடப்பட்டி ருப்பதன் காரணமாக இளைய தலைமுறை யினர் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ள னர். இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் அமுல் செய்யப்படும் தொழில் நிகழ்ச்சித் திட்டங்களையும் இங்கு அமுல் செய்ய முடி யாது இருக்கிறது.

- இவ்வாறு விளக்கமளிக்கிறார் தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் சி.முத்துகுமாரசாமி

யாழ்.மாவட்டத்தில் தொழிற்சாலைகள், கூட்டுத்தாபனங்கள் இயங்காமையால் இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற முடியாமலுள்ளனர்.

சாதாரண சூழ்நிலை நிலவிய காலங்க ளில் பல தொழிற்சாலைகள் மற்றும் சீமெந்து, உப்பு, இரசாயன கூட்டுத்தாபனங்கள் இயங் கியமையால் இத்திணைக்கள தொழில் காண் நிலையங்கள் மூலம் பலர் வேலைவாய்ப்புக் களைப் பெறக்கூடியதாக இருந்தது. யுத்தம் காரணமாக இவை இயங்காமல் போய் விட்டதால் வேலை வாய்ப்புக்களும் இல் லாமல் போய்விட்டன. இதனால் ஏனைய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட தொழில் இல்லங்களும் 'தருனா' 'அருண-II' நிகழ்ச் சித்திட்டமும் யாழ்.மாவட்டத்தில் செயற் படுத்தப்படவில்லை, மேற்படி தொழிற் சாலைகளும் கூட்டுத்தாபனங்களும் மீள இயங்கத் தொடங்கும் போது திணைக்கள "தொழில் இல்லம்" மூலம் வேலை வாய்ப் புக்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

- இவ்வாறு உதவித் தொழில் ஆணையா ளர் மேலும் விளக்கமளித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக உதவித் தொழில் ஆணையாளர் தெரிவித்த கருத்து கள் நேற்றைய உதயனின் 9 ஆம் பக்கத்தில் ஒரு செய்தியாக வெளியாகி இருந்தது. அந் தச் செய்தியில் குறிப்பிட்டிருந்தது போல "குடாநாட்டில் தொழிற்சாலைகள் இயங்கா மல் இருப்பதற்கு அரசின் அசமந்தப் போக்கே காரணம்' என்ற சாரப்பட்ட கருத்து எதனையும் தாம் வெளியிடவில்லை என்று உதவித் தொழில் ஆணையாளர் உதயனுக் குத் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் மாணவியாக, ஆசிரியராக, அதிபராக விளங்கி வலயக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து சேவையில் நிறைவு காணும் எம் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய

**திருமதி றெஜினா இருதயநாதன்**

அவர்கள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள்.

யா/சென்றி ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை,
மானிப்பாய்.

(48682)(26-19-84)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 07-10-2005 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் பண்பாட்டியல் முதுகலைமாத்ணி (M.A.Cultural Studies) பட்டம் பெற்ற எமது சக உத்தியோகத்தர்

**சிவசுப்பிரமணியம் உமாபாலன்**

அவர்கள் கல்வி ரீதியாகவும் உத்தியோக ரீதியாகவும் பல மேன்மைகளைப் பெற அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(48618)(26-19-34)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள்**

1. பொதுக்கலை மாணித் தேர்வு பகுதி - II 2002
2. சிறப்புக் கலை மாணித் தேர்வு பகுதி - II 2002

மேற்படி பரீட்சைகளை 28-11-2005 திங்கட்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 23-11-2005 தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 - 2223612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

*பதிவாளர்.*
*09.11.2005.*

(சி/45793)(26-19-34)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா நடராசா

*[இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள படவரைஞர்]*



நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த தம்பையா நடராசா நேற்று (09.11.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோகமலரின் அன்புக் கணவரும் சுதாகர் (பொறியியலாளர், அமெரிக்கா) அவர்களின் அன்புத் தந்தையும் ஜெகஜனனி (அமெரிக்கா) அவர்களின் அன்பு மாமனும் அஞ்சலியின் (அமெரிக்கா) அன்புத் தாத்தாவும் முத்துக்குமாரி, செந்திவடிவேல், சபாரத்தினம், கதிராசிப்பிள்ளை, குஞ்சுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் தருமலிங்கம், சுந்தரலிங்கம் (U.K), தியாகலிங்கம் (இந்தியா), உருத்திரலிங்கம் (உகண்டா), திருமதி வேதநாயகமலர், தில்லைநாதன், சாந்தமலர், ஆனந்தராசா, சோதிமலர், மனுவல் (உகண்டா), சிவசுப்பிரமணியம் (நடனமுருகன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.11.2005 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'லிங்க வாசா',*
*பிரதான வீதி, நெல்லியடி,*
*கரவெட்டி.*

தகவல்:
**க.ஆனந்தராசா**
(இலங்கை வங்கி, பருத்தித்துறை).

## ஆறுமுகம் சோமசுந்தரம்

*(மணல்தறைலேன், கந்தர்மடம்)*



கட்டுடையைப் பிறப்பிடமாகவும், மணல்தறை லேன் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் (இளைப்பாறிய Tax Officer, வருமானவரித் திணைக்களம்) 07-11-2005 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கட்டுடை சித்த வைத்தியர் ஆறுமுகம்-சிவகாமிப்பிள்ளை (முன்னாள் பாலர் பாடசாலை ஆசிரியை) தம்பதியரின் பாசமிகு மகனும் சுபத்திரா தேவியின் அன்புக் கணவரும் தயாநிதி (கனடா), தேவகி (கனடா), நடனசபேசன் (அமெரிக்கா), கருணாகரன் (கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரன், விஜயகுமார், ரேணுகா, பாமினி, ஜெயச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆறுமுகம் விசுவநாதன் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் -சிவில், பிரதேசசபை மானிப்பாய்) காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(42613)(26-19-34)

மகேச பவனம்,
வல்லை வீதி, சங்கானை.

தகவல்:
**ஆ.விசுவநாதன்** *(தம்பி).*

# தேர்தல் பணிகள் குறித்த சந்திப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

ஜனாதிபதித் தேர்தல் பணிகள் குறித்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுடனான இறுதிச் சந்திப்பு இன்று வியாழக்கிழமை தேர்தல் ஆணையாளரால் நடத்தப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னெடுக்கப் படவேண்டிய பணிகள் தொடர்பாக நடைபெறவுள்ள இச்சந்திப்பு இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பில் நடைபெறவுள்ளது. (ஒ-202-204)

# வாகனக் கடத்தல் வவுனியாவில் அதிகரிப்பு

வவுனியாவில் கடந்த ஒருவார காலத்தில் மட்டும் பதினைந்துக்கும் மேற்பட்ட வாகனக் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரத்தில் பதினொரு மோட்டார் சைக்கிள்கள், இரண்டு வான்கள், மூன்று ஓட்டோக்கள் கடத்தப்பட்டுள்ளன.

வவுனியாவில் கடத்தப்படும் வாகனங்கள் இராணுவக் கட்டுப் பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகரித்துவரும் வாகனக் கடத்தலை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன் குற்றத் தடுப்பு பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலீஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-164-ரி)

# சமய தீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் ஏற்பாட்டில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நாளை ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை சமய தீட்சை கரணவாய் சிவஸ்ரீ கைலாச நாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இதில் ஏழு வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்றிப் பயன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (3)

DEZA
DDC
DSC
SDC
COSUDE

**TENDER NOTICE**

SDC Jaffna invites tender for the construction of Chavakachcheri Hindu Primary School complex. That consists of 2 Sets OF 140'x25'two storied buildings, 1 Set of toilet block cum path way 20'x50' together with water tank and landscaping.

Interested Bidders having ICTAD grade MS and M6 shall collect their bids.

Bid document shall be collected at **SDC field office Jaffna 521/11, point Pedro Road, Jaffna. Tel: 021-2223928 up to 12.OOA.M on 18th of November 2005.** For further details feel free to contact the Project managers.

(92620)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



| மண்ணின் மடியில் | இறைவன் அடியில் |
| --- | --- |
| 01 | 11 |
| 07 | 10 |
| 1946 | 2005 |

## அமரர் வல்லிபுரம் இராசேந்திரம்

சண்டிலிப்பாய் தனில் சாந்தமுடன் வாழ்ந்த
சால்புகழோன் இராசேந்திரம் மண்ணதை
விட்டகன்று முப்பத்தொரு நாளுமாய்ச்சோ?
அன்புமழை பொழிந்தவும் புதல்வர்கள் ஐவரையும்
அநாதரவாக தெருவழியே தவிக்கவிட்டீர்
நீர் நடந்த பாதை உம் வரவைக் காணா
நிதம்நிதம் ஏங்கியே தவிக்குதப்பா;
சந்திவெளி மரங்களெல்லாம் வாடி தலை சாய்க்குதப்பா;
வையகத்தில் இனிதுவாழ்ந்த பெருந்தகையே
வானுறையும் தெய்வத்தில் பெறுக நீ சாந்தியே!

இன்று (10.11.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொண்டு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

கராச்சடி, சண்டிலிப்பாய். (சி.45795) (39-96-19-34)

# மறக்க முடியாத நினைவில்

| 2 ஆம் வருட அஞ்சலி | 18 ஆம் வருட அஞ்சலி |
| --- | --- |
| மலர்ந்தது 14 05 1945 | மலர்ந்தது 14 03 1972 |
| ஜோதியானது 10 11 2003 | ஜோதியானது 19 10 1987 |



**இராமநாதன் ஜெயசிங்கம்**
(Attorneyat Law, Notary Publlc, J.P.U.M &Commissioner of Oayhs)



**ஜெயசிங்கம். சோபனா**
(Holy Family convent- Student)

குழலினில் இனிய பேச்சு
குவிந்திடும் உதட்டில் ஞானம்
நிழலினில் தூய வாழ்வு
தாயினும் நிறைந்த அன்பு
பழகுதற்கு அருமைப் பண்பு
பயனினைக் கருதாய்ச் சேவை
இளகிய நெஞ்சம் எல்லாம்
இறைவன் பறித்தது ஏனோ

நீதிமானின் ஆன்மா கடவுளின் கையில் உள்ளது
அவர் நம்மை விட்டுப்பிரிந்து சென்றது
பேரழிவாகக் கருதப்பட்டது

கருவில் உன்னைத் தெரிந்து கொண்டோம்
உனக்குப் பெயரிட்டு அழைத்தோம்
நீ எமக்கே சொந்தம்

ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதிகாண
ஆண்டவனை நிதமும் இறைஞ்சுகின்றோம்

-குடும்பத்தினர்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## இத்தேர்தல் குறித்து சிரத்தைகொள்ள தமிழருக்கு என்ன தேவை உள்ளது?

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக - வாக்குகளைப் பெறுவதற்காக - வாக்குறுதிகளை வாரி வழங்கும் பெரும்பான்மை இனத்தின் இரு வேட்பாளர்களும் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்திலும் அது தொடர்பான விடயங்களிலும் தெளிவான - திட்டவட்டமான - முடிவுகளையோ தீர்மானங்களையோ வெளியிடாமல் ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றார்கள்.

நாட்டை உலுப்பும் தலையாய பிரச்சினை இனச் சிக்கல்தான். தற்போதைய யுத்தநிறுத்தம் குழம்பி, போர் வெடித்து, நாட்டில் மிக மோசமான நிலை எப்போதும் ஏற்படலாம் என்று மக்கள் அஞ்சுகின்றனர். போர் விளிம்பில் நாடு தவிக்க, அதிலிருந்து நாட்டைக் காப்பதற்குத் திட்டவட்டமான - உருப்படியான - தீர்வு நகர்வுகளைத் தாங்கள் வைத்திருக்கின்றார்கள் என்றோ, அவற்றின் விவரம் என்னவென்றோ இரண்டு பிரதான கட்சிகளின் தலைவர்களும் வெளிப்படையாகக் கூறாமல், அதற்கு மாறாக மணலைக் கயிறாகத் திரிப்போம், சந்திரனிலிருந்தாவது அரிசி கொண்டுவந்து கொடுப்போம் என்ற பாணியில் நடக்க முடியாத கதைகளைத் தமது திட்டங்களாகக் காட்டி, புளுகு மூடைகளை இலங்கைத்தீவு மக்களுக்கு அவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தென்னிலங்கையில் பேரினவாத மேலாண்மைப் போக்கைத்தட்டி எழுப்பி, கிளர்ந்தெழவைத்து, அதில் அரசியல் குளிர்காயும் பிரதமர் மஹிந்தவின் அணி, பேரினவாதிகளின் விருப்புக்குத் தீனிபோட்டு, அவர்களின் வாக்குகளைச் சுருட்டுவதற்காக இனப்பிரச்சினை விடயத்துக்கு ஒற்றையாட்சி முறையின் கீழ்த்தான் தீர்வு என்ற ஒரு விவகாரத்தை முன்வைத்துத் தன்னை முழுப் பேரினவாத சக்தி என்பதை நிரூபித்து நிற்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணிலின் பக்கத்திலும் - ஐ.தே. கட்சித் தரப்பிலும் - ஈழத் தமிழர் விவகாரத்திற்குத் தீர்வு காண்பது குறித்து திட்டவட்டமான ஏற்பாடு - யோசனை - ஏதும் முன்வைக்கப்படவேயில்லை.

வெறுமனே ஒஸ்லோ இணக்கப்பாடு, டோக்கியோ பிரகடனம், ஐக்கிய இலங்கைக்குள் உச்ச அதிகாரப் பரவலாக்கல் என்று வெளிவேட சோடனை போடுகின்றாரே தவிர இனப்பிரச்சினையின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாகத் தமது நிலைப்பாடு என்னவென்பதை ரணில் தெளிவுபடுத்தவேயில்லை.

தமிழரின் பிரச்சினை தொடர்பாக அவர்களினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனக் கோரி முன்வைக்கப்படும் பூர்வாங்க விடயங்களான தமிழர் தேசிய இனம், தமிழர் தாயகம், தமிழர் சுயநிர்ணய உரிமை போன்றவை தொடர்பாகவும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை சம்பந்தமாகவும் எந்தத் தெளிவுபடுத்தல்களுமே ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லை.

இது ஒருபுறமிருக்க, தென்னிலங்கையில் பேரினவாதத்தைக் கிளப்பி வாக்குகளைச் சுருட்டுவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு, முனைந்து, அதில் முன்னேற அது கண்டு மிரண்ட ரணிலின் தரப்பு தானும் தென்னிலங்கையில் பேரினவாதக் கொள்கையைப் போர்த்துக் கொள்ளத் தயாராகி விட்டது. அக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் நவீன் திஸநாயக்க போன்றோரின் உரைகளும், பேட்டிகளும் இதையே காட்டுகின்றன.

வடக்கு - கிழக்குத் தமிழர் வாக்குகளை நம்பியிருக்க முடியாது என்ற இக்கட்டு - யதார்த்தம் - புரியத் தொடங்கியதும் பீதியுற்ற ஐ.தே. கட்சி, தென்னிலங்கையை வளைத்துப் போடுவதற்காக தானும் பேரினவாத சகதிக்குள் மெல்ல மெல்ல மூழ்கத் தொடங்கி விட்டது.

தென்னிலங்கையில் அக்கட்சியின் பிரசாரக் கிணறுகளைத் தோண்டப் பேரினவாதப் பூதம் கிளம்புவது இதனால் தான்.

ஆக, ஒட்டுமொத்தத்தில் தென்னிலங்கைக் கட்சிகள் எவையும் பேரினவாதப் போக்கிலும் பிடியிலும் இருந்து விடுபடத் தயாராக இல்லை, அதற்கான தெளிவான சிந்தனையோ, தீர்க்க தரிசனமான பார்வையோ, சிறுபான்மையினரையும் சரியாக மதித்து அவர்களுக்கு உள்ள நியாயமான - சமனான - உரிமைகளை வழங்குகின்ற தாராளப் போக்கோ, சமரச எண்ணமோ அவற்றுக்கு இல்லவே இல்லை என்பதை இந்த ஜனாதிபதித் தேர்தலும் அதை ஒட்டிய அக் கட்சிகளின் செயற்பாடுகளும், பிரசாரங்களும் நமக்குத் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்த நாட்டில் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் ஒப்புதலும், பங்களிப்பும், இணக்கமுமின்றி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு அவர்கள் மீது திணிக்கப்பட்ட 1972ஆம் ஆண்டினதும், அதைத்தொடர்ந்த 1978 ஆம் ஆண்டினதும் அரசமைப்புகளின் பெறுபேறாகவே இலங்கைத் தீவு முழுவதற்குமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான இத் தேர்தல் நடைபெறுகிறது.

இந்த உயர்பதவிக்குரியவருக்கு சட்ட, அதிகார அந்தஸ்து அளிக்கும் அரசமைப்பை தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இத் தேர்தலில் போட்டியிடும் பெரும்பான்மைக் கட்சிகளின் வேட்பாளர்கள் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் எண்ணப் போக்குக் கொண்டவர்களாகவும் இல்லை.

இத்தகைய நிலையில் இத் தேர்தல் குறித்துத் தமிழர்கள் சிரத்தை கொள்வதற்கு என்ன தேவை இருக்கிறது?

# புலமைப் பரிசில் கொடுப்பனவு 2004 வரை வழங்கப்பட்டுவிட்டது

## யாழ்.கல்வி வலயக் கணக்காளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு 2004ஆம் ஆண்டுவரை முற்றாக வழங்கப்பட்டு விட்டன.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். கல்வி வலயக் கணக்காளர் க.இ.துரைசிங்கம்.

புலமைப்பரிசில் பெறத் தகுதிபெற்ற மாணவர்களுக்கான கொடுப்பனவுகள் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தவணைரீதியாக மாணவர்களின் வரவின் அடிப்படையிலேயே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இதனைப் பெறத்தவறுபவர்களின் பணம் பாடசாலைகளால் திருப்பி அனுப்பப்படுகின்றது. அவற்றை நாம் பின்னர் திருகோணமலையில் உள்ள மாகாணத் திறைசேரிக்கு அனுப்பிவிடுவோம்.

2004ஆம் ஆண்டுவரை எவராவது இக்கொடுப்பனவைப் பெறத்தவறியிருப்பின் எம்முடன் தொடர்புகொண்டால் நாம் திறைசேரியுடன் தொடர்புகொண்டு கொடுப்பனவைப் பெற்றுத்தர ஆவன செய்வோம்.

தேசியப் பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளுக்கான கொடுப்பனவுகள் மத்திய அமைச்சின் ஊடாகவும் ஏனைய பாடசாலைகளின் கொடுப்பனவுகள் திருகோணமலை மாகாணத் திறைசேரியூடாகவும் வழங்கப்பட்டு வருகின்றன.

புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் 1983ஆம் ஆண்டுமுதல் ஓர் ஆண்டுக்கு ஆயிரம் ரூபாவாகவும் 1989 முதல் 2 ஆயிரத்து 400 ரூபாவாகவும் தற்போது 2005 ஜனவரி முதல் 5 ஆயிரம் ரூபாவாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. மாதாந்தக் கொடுப்பனவு 500 ரூபா ஆகும்.

2005 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் நிதி ஒதுக்கீடு போதாத காரணத்தால் இதுவரை வழங்கப்படவில்லை. அதற்குரிய கொடுப்பனவை இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் கொடுப்பனவைப் பெறாதோரின் பணத்தை அதிபர்கள் திருப்பி அனுப்பிய பின்னரே சம்பந்தப்பட்ட மாணவர்கள் கல்வி வலயத்துக்கு வந்து தமக்கு கொடுப்பனவு கிடைக்கவில்லை என முறையிடுகின்றனர். இவ்வாறான நிலைமை ஏன் ஏற்படுகின்றது எனத் தெரியவில்லை. பின்னர் நாம் பாடசாலைகளுக்கு அத்தொகையை மீண்டும் அனுப்பவேண்டி உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்கும்படி பாடசாலைகளுக்கு எம்மால் ஆலோசனை கூறப்பட்டது. சில பாடசாலைகள் அவற்றை ஏற்று நடைமுறைப்படுத்தின. அனைத்துப் பாடசாலைகளும் நடைமுறைப் படுத்தினால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படா.

ஆரம்பத்தில் ஆண்டு வருமானம் 6 ஆயிரம் ரூபாவிற்கு உட்பட்டவர் களின் பிள்ளைகளுக்கே புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்பட்டது. தற்போது ஆண்டு வருமானம் எல்லை வரம்பு 24 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு இக்கொடுப்பனவு இல்லாதிருப்பினும் தொடர்ந்து மூன்று பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் மூன்றாவது பிள்ளைக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படும்.- இவ்வாறு கணக்காளர் தெரிவித்தார். (ஒ-12)

## உயர்தரப் பரீட்சை ஒப்படைக்கான பதிவுக்கு கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு,நவ.10

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு முதற்றடவையாகத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது ஒப்படைகளைச் சமர்ப்பிப்பதற்கென கல்வி வலயங்களில் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதி வரை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் கடந்த ஏப்ரல் 10 ஆம் திகதியோடு முடிவுற்ற போதும் பெரும்பாலான மாணவ மாணவியரின் கோரிக்கைக்கு இணங்க இதற்கான காலக்கெடு இம்மாதம் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி இம்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒப்படைகளைச் சமர்ப்பிப்பதற்கான பதிலை மேற்கொள்ள மாணவர்கள் கல்வி அமைச்சுக்குச் சமுகமளிக்கத் தேவையில்லை எனவும்-

தாம் வதியும் மாகாணக்கல்வி வலயத்தில் அப்பதிவை மேற்கொண்டு தமது ஒப்படைகளைச் சமர்ப்பிப்பதற்கு உரிய பாடசாலையொன்றைத் தெரிவு செய்து கொள்ளமுடியுமென்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-206)

## மழை நேரம் பஸ்ஸில் ஒழுக்கு

அச்சுவேலி,நவ.10

அச்சுவேலியிலிருந்து பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் மோசமாகப் பழுதடைந்திருப்பதால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்த பஸ்ஸின் கூரைத்தகடுகள் பிரிந்த நிலையில் இருப்பதால் மழை பெய்யும் போது ஒழுக்கு ஏற்படுகிறது. அதனால் மாணவர்களின் சீருடைகள் அழுக்கு நீர்பட்டு சேதமாகிறது. இதனால் பஸ்ஸினுள் பயணிகள் குடைபிடித்துக் கொள்ள வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, பிற்பகல் வேளையில் இடம்பெறும் மாணவர்களுக்கான பஸ் சேவை சீரில்லாமல் இருப்பதால் பருவகாலச் சீட்டு இருந்தும் பணம் செலுத்தி தனியார் வாகனங்களில் மாணவர்கள் பிரயாணம் செய்யவேண்டி உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ஒ-11)

## மழையால் வீட்டுத் திட்டம் பாதிப்பு

வலி.வடக்கு, நவ.10

உலக வங்கியின் வீட்டுத்திட்டத்தின் கீழான கட்டுத்திட்டப்பணிகள் கடந்த சில நாள்களாக தொடர்ந்து பெய்த மழை காரணமாக பாதிப்படைந்துள்ளன.

- யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் பிரிவு ரீதியாக மணல் பெறுவதால் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக வேலைகள் தடைப்பட்டு இருந்தன.

மீண்டும் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தொடர் மழை காரணமாக இவ் வீடுகளின் வேலைத் திட்டங்கள் மீண்டும் பாதிப்படைந்துள்ளன. (3-86)

## பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த மாணவருக்கு ஆளுமை விருத்தி பயிற்சி

### தென்மராட்சி கொத்தணிப்பாடசாலைகளில் இன்று ஆரம்பம்

தென்மராட்சி,நவ.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் பாடசாலை கற்கையை நிறைவுசெய்து வெளியேறிய மாணவர்களுக்கு ஆளுமை விருத்தி நிகழ்வுத் திட்டத்தின் கீழ் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வலயத்தில் உள்ள கைதடி, மட்டுவில், சாவகச்சேரி நகர், சாவகச்சேரி வடநகர், கொடிகாமம், வரணி, உசன் ஆகிய கொத்தணிகளின் மூலாதாரப் பாடசாலைகளில் இப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

தொழிற்பயிற்சித் தேவைகளை இனங்காணுதல், தீர்மானமெடுத்தல், சமாதானமும் ஒத்துழைப்பும், பிரஜைகள் மேம்படல், சமூக அபிவிருத்தி, சர்வதேச தொடர்புகளை கட்டியெழுப்புதல், பாலியல்கல்வி தொடர்பான நிகழ்ச்சித் திட்டம், சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழித்தல், சிறந்த எண்ணப்பாங்கினை விருத்தி செய்தல், இயற்கை அனர்த்தங்களின் போது செயற்படல், பயனுள்ள வகையில் ஓய்வைக் கழித்தல் ஆகிய பயிற்சிகள் இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தர வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்கள் தமது பகுதியில் உள்ள மூலதாரப் பாடசாலையில் பயிற்சிகளைப் பெறமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று தொடக்கம் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## நாளை

ஐப்பசி 25
வெள்ளிக்கிழமை
11.11.2005
திதி: தசமி
பிற்பகல் 02.23வரை
நட்சத்திரம்: சதயம்
காலை 06.07 வரை
சுபநேரம்: 06.06 - 07.36
ராகுகாலம்: 10.36 - 12.06
(யாவும் பழைய நேரப்படி)

## புத்தகங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு இலங்கை வங்கி புத்தகங்களை அன்பளிப் பாக வழங்கவுள்ளது.

இந்தப் பாடசாலையில் இலங்கை வங்கியின் மாணவர் சேமிப்புக்கான பொன் அரும்புகள் திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சம் ரூபா வைப்பிடப்பட்டதைப் பாராட்டிப் புத்தகங்களை வழங்கப் படவுள்ளன.

இதற்கான நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் க.பால சுப்பிரமணியமும் கௌரவ விருந்தினராக யாழ். மேற்றரக் கிளையின் பிரதான முகாமையாளர் என்.சிவரத்தினமும் கலந்துகொள்வர். (ஒ)

## கைதிகளுக்குத் தொழிற்பயிற்சி

சிறைக் கைதிகள் சுயதொழில் வாய்ப்புக்களைப் பெற்று இலாப மீட்டிப் பயன் பெறக்கூடிய தொழில் பயிற்சிகளை வழங்கும் செயல் திட்ட மொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, சிறைச்சாலைகளுள் ஊதுபத்தி தயாரிப்பு, செயற்கைப் பூக்களைத் தயாரித்தல், பல்வேறு விதமான பண்டங்களை உருவாக்கல் மற்றும் தும்புக் கைத்தொழில் என்பன பயிற்றுவிக்கப்படுகின்றன. புதிய திட்டத்தின் கீழ் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, பிஸ்கற், ரொபி, கேக், மெழுகுதிரி போன்றவற்றைத் தயாரிக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வெற்றிகரமான பலா பலன்கள் கிடைத்து வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஜெனரல் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

சிறையிலிருந்து விடுதலையாவோர் சுயதொழில் வாய்ப்புபெறும் விதமாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-206)

## உதயவாக்கு

சம்பாத்தியத்தைவிட அதிகமாகச் செலவழிப்பதன் மூலம் தொல்லையில் இருந்து மீள முடியாது.

ஆபிரகாம்லிங்கன்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கார் விற்பனைக்கு

B- xxxx தொடர் இலக்கமுடைய நிசன் சன்னி HB- 11 மொடல் வெள்ளை நிறக் கார் உடன் விற்பனைக்கு. தொடர்பு: T.சந்திரன், 71/11, சீனியர் லேன், கலட்டி T.P.: 0776511258. (42593)

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு அம்மன் கோயில் அருகில் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0094112599399. (42509)

### விற்பனைக்கு

டாக்டரின் பாவனையில் உள்ள Suppercub 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr. குலசிங்கம், இல.7/1, சம்பியன் லேன் ஊடாக நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42575)

கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் போரூட் அலுவலகத்திற்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட நவீன மயப்படுத்தப்பட்ட ஒரு பரப்புக் காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 222 7286. (42612)

### சேவை

55000 அமெரிக்க விசா லொத்தர் ( Green card) விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரியவாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்குத் தாமதிக்காமல் தொடர்பு கொள்க. முடிவு திகதி 05.12.2005. உங்களது விண்ணப்பங்களை அமெரிக்கா விற்கு Internet மூலம் அனுப்பி அமெரிக்க நிசீட் அனுப்பி வைப்போம். Penquin Bookshop, B2/F23, Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 . (சி-46105)

### வாடகைக்கு

பெண் பிள்ளைகள் தங்கியிருக்கக்கூடிய வசதிகளைக் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இல.14, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-46099)

---


# ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்



வம்சாவளியாக அம்பாளின் அருள்கொண்டு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள
**வி.நாகராஜ சுவாமிகள்** அவர்கள்

இவர் ஜாதகம், கைரேகை மூலமாக துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, மற்றும் வியாபார லட்சுமிகர விடயமான பொருத்தம், குடும்பப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார். வெளிநாட்டுப் பயணம் மற்றும் எதிர்காலப் பலன்களை அறிவதற்கும் நாடுங்கள்.

✱ எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் சுவாமிகளை சந்திக்கலாம்.

**பிள்ளையார் இன்**

அறை எண் 5, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9582596.


---

# பதவி வெற்றிடம்

ஸ்ரீ பரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரமத்திற்கு கீழ்க்கண்ட பதவிகளுக்கு உடன் ஆண்/பெண் தேவை

**1. நிர்வாக உத்தியோகத்தர்:**

தகைமை

1) ஜி.சீ.ஈ (சா/த) சித்தி
2) ஆங்கிலம்/தமிழ் தட்டச்சு மேலதிக தகைமை
3) அனுபவம் பெற்றவர்கள் , ஓய்வூதியம் பெற்றோர், நிர்வாக சேவையாளர் விரும்பத்தக்கது.
4) வயதெல்லை 40-65 வருடங்கள்

**2. பெண் மேற்பார்வையாளர்:**

1) ஜி.சீ.ஈ (சா/த) சித்தி
2) ஆங்கிலத்தில்/தமிழ் தட்டச்சு மேலதிகம்
3) வயதெல்லை 30-60 வருடங்கள்

குறிப்பு:

இருப்பிட, உணவு வசதிகள் உண்டு.
தொண்டூதியம் பேசித் தீர்மானிக்கலாம்.
முடிவு திகதி: 22.11.2005.

விண்ணப்பம் செய்தவர்கள் சகல தகைமை ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.
விண்ணப்பம் செய்யத் தாமதமானவர்கள் நேர்முகநாளில் சமுகமளிக்கவும்

**தலைவர், ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம், வதிரி, கரவெட்டி.**
**என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.**

**த.அரிபிரசாதம்,**
**செயலாளர்,**
**ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்.**

ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்,
வதிரி, கரவெட்டி.
05.11.2005 (சி-46158)(21.19.34)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பனும் உயர் தொழிநுட்பவியல் HNDA 2ஆம் வருட மாணவனுமான
**ஜெயக்கணேஷ்**
அவர்களின் அன்பு தந்தையாரான
**அம்பலவாணர் ஜெயபாலரட்ணம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உயர் தொழிநுட்ப நிறுவன 2ஆம் வருட மாணவர்கள்.**

(42609)(21.19.34)

---

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கணபதிப்பிள்ளை பாலசிங்கம்** — திருமதி **பாக்கியம் பாலசிங்கம்**

பிறப்பு: 19-04-1931 — பிறப்பு : 10-12-1928
இறப்பு : 21-10-2004 — இறப்பு : 22-01-2004

அல்வாயில் பிறந்து எம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி வாழவைத்து பிற்காலத்தில் எமது பிள்ளைகளுக்கு ஆதரவாக எம்முடன் ஹொலண்ட் நாட்டில் வசித்து இறுதிவரை எமக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்த எமது அன்புப் பெற்றோருக்கு எமது அன்புக் காணிக்கையை செலுத்துகின்றோம்.

பிள்ளைகள்:
தயாளன், ரமேஷ், நாகபூசணம்

மருமக்கள்:
சுயாதா, சரித்தா சிறின்

பேரப்பிள்ளைகள்:
ஸ்ரீ சாயினி, சாயித்தனா, சங்கீதன் சாலோம், கனிஷன், பிரதீஷன் லனிஷா, றனிசாந், மனிஷா


தகவல்:
**சி.பார்த்தீபன்** (பேரன்)
**அல்வாய்.**

(சி-45794) (21.19.34)

---

# நெஞ்சைவிட்டகலா நினைவலைகள்...

## முதலாம் ஆண்டு — 85 ஆம் நாள்



உயிர் கொடுத்து உறவானீர் - எம்
உயிர் காக்க உணவானீர்

நோயற்று நாம் வாழ - தாயே
நோயுற்றுப் பாய் வீழ்ந்தீர்

தலை நிமிர்ந்து நாம் வாழ - நாளெல்லாம்
தவமிருந்தீர்
வரமெல்லாம் நாம் பெற்றோம்
வாழ்வெல்லாம் வரம் பெற்றோம்

தோள் நிமிர்ந்து வாழ்வினில்
துவண்டு விடா மனம் பெற்றோம்!
துணிவெல்லாம் வரப் பெற்றோம்
சீரான, சிதைந்துவிடா உளம் பெற்றோம்!
யார் கொடுத்தார் இத்தனையும் - உங்களைத் தவிர

பேர் கொடுத்து நிலைத்து நிற்கும்
பேறு கொடுக்கும் நீங்கள்அல்லால் - சொர்க்கப்
பேறு கொடுக்கும் தெய்வம் உண்டோ

தந்தை தாயே நாமென்ன கொடுப்போம்
தேறாமல் தேம்பியழும் நெஞ்சமதில் தேக்கியே வைத்த
ஆறு போல் அருகி வரும் கண்ணீரை
மட்டுமே உங்களுக்காய் விட்டோம்.



**அமரர் தர்மலிங்கம் பரராஜசிங்கம்**
மலர்வு:1924.07.09
உதிர்வு:2004.11.10

**திருமதி பரராஜசிங்கம் கிருஷ்ணவதி**
மலர்வு:1937.12.08
உதிர்வு:2005.08.17

(C-45791)

27/7, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். T.P.:-021 2223205

-குடும்பத்தினர்.

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் ௯ மீன் ஏலவிற்பனை நிலையங்கள்

## ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதி உதவியுடன் அமைக்கத் திட்டம்

செம்பியன்பற்று,நவ.10

வடமராட்சி கிழக்குக் கரையோரப் பகுதி மக்களின் நன்மைகருதி ஒன்பது மீன் ஏல விற்பனை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தலா 9 லட்சம் ரூபா செலவில் ஒவ்வொரு மீன் விற்பனை நிலையமும் அமைக்கப்பட வுள்ளன.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு ஆகிய கிராம மக்களின் நன்மைகருதியே இந்த நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த மீன் விற்பனை நிலையங்களைக் கிராமமட்டத்திலான கடற்றொழிலாளர் சங்கங்கள் செயற்படுத்தும் எனவும் -

இதற்கென கிராம மட்ட கடற்றொழிலாளர் சங்கத் தலைவர்களும் ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்தினரும் அண்மையில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-36-203)



புத்தூர் கிழக்கு குருநாதன் முன்பள்ளியும் ராஜன் முன்பள்ளியும் இணைந்து அண்மையில் நடத்திய விளையாட்டு விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் ஆகியோரையும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். [3-203]

## விடைத்தாள் திருத்தும் பணி

வலி.தெற்கு,நவ.10

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த இருதினங்கள் நடைபெற்ற நான்காம் ஆண்டுக்கான மாகாணமட்ட மொழித்திறன் அறிவு அடைவுகளை அளவிடும் பேச்சு, வாசிப்புத் தொடர்பான பரீட்சைகளுக்கான விடைத்தாள் திருத்தும் பணிகளும் புள்ளி விடைத்தாள் பகுப்பாய்வு வேலைகளும் நான்கு கோட்டங்களிலும் குறிப்பிட்ட பாடசாலைகளில் இன்று நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு கோட்டங்களிலும் இப் பணிகளில் ஈடுபடவென வெவ்வேறு பாடசாலை ஆசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (3-152)





## வாய்ப்புற்றுநோய் சிகிச்சையில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை

### சுகாதாரப் பகுதியினர் கவலை தெரிவிப்பு

வலி.தெற்கு, நவ.10

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற்ற வாய்ப்புற்று நோய் தொடர்பான பரிசோதனையில் பொது மக்கள் ஆர்வம் காட்டவில்லை எனச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

சுமார் 25 சதவீதமான மக்களே வாய்ப்புற்று நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

50 வயதுக்கு மேற்பட்டவர்களை வாய்ப் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்தல் விடுத்திருந்தனர்.

திருமதி யோகராணி ஸ்ரீ கிருஷ்ணன் ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் நல வாழ்வு அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இப்பரிசோதனைகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

தெல்லிப்பழை, அளவெட்டி, இணுவில், தாவடி, உடுவில், இளவாலை மற்றும் மருதனார்மடம், ஏழாலை, சுன்னாகம், கந்தரோடை, வசாவிளான் போன்ற இடங்களில் இப்பரிசோதனைகள் இடம்பெற்றன.

இருப்பினும், பெருந்தொகையான மக்கள் இப்பரிசோதனைகளை மேற்கொள்ள முன்வரவில்லை எனவும், இது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டு அடுத்த முறை பரிசோதனைகளில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் எனவும் இப்பகுதியைச் சேர்ந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அறிவுறுத்தியுள்ளார். (3-152)

## அரையாண்டுப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுக்குரிய பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

முகாமைத்துவம், சமூக நல்லிணக்கம் ஆகிய பாடங்கள் நாளைமறுதினம் சனிக்கிழமை முறையே காலை 9.30 - 11.30 மணி, பிற்பகல் 1.30 - 3.30 மணி ஆகிய நேரங்களில் நடைபெறவுள்ளன. (3-202)

## பொன்விழா பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.10

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் பொன்விழாவை முன்னிட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் கல்விப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் தமிழ்க்கட்டுரைப் போட்டிகள் காலை 9 மணிக்கும் ஆங்கிலக் கட்டுரைப் போட்டிகள் முற்பகல் 10 மணிக்கும் -

தமிழ்ப் பேச்சுப் போட்டி முற்பகல் 11.15 மணிக்கும் ஆங்கிலப் பேச்சுப் போட்டி நண்பகல் 12.15 மணிக்கும் -

பிரிவு 2-5 இற்கான பொது அறிவுப் போட்டி பிற்பகல் 2 மணிக்கும் பிரிவு 4-5 இற்கான கவிதைப் போட்டி பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறவுள்ளன. (3-202)

## ஓய்வுபெற்ற பணிப்பாளருக்குப் பிரிவுபசார வைபவம்

தென்மராட்சி,நவ.10

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற திருமதி றெஜீனா இருதயநாதனுக்கு வலய நலன்புரிக்கழகத்தினர் அண்மையில் பிரிவுபசார விழாநடத்தினர்.

நலன்புரிக் கழகத் தலைவர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன், பிரதிக்கல்வி பணிப்பாளர் (திட்டமிடல்) செல்வி கிருபா வீரசிங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, நிர்வாக அலுவலர் எஸ்.பத்மநாதன், பிரதம எழுதுநர் க.தர்மகீர்த்தி உட்படப் பலர் உரையாற்றினர். (3-117)

# ஆழிப்பேரலை பாதித்த மக்களுக்கு வெண்புறா நிறுவனத்தின் திட்டங்கள்

## சிறுவர்களை முன்நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முனைப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

குடாநாட்டில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை வெண்புறா நிறுவனம் முன்னெடுத்துவருகின்றது.

சின்னக்கொலனி, தீருவில் ஆகிய இடங்களில் இடைத் தங்கல் முகாம்களை இந்த நிறுவனம் அமைத்துக் கொடுத்துள்ளது.

அத்துடன், நிவாரணத் திட்டம், முன்பள்ளிகளுக்கான சத்துணவு வழங்கல், முன்பள்ளித் திட்டம், சிறுவர் கழகங்கள் புனரமைத்தல், உளசமூக மேம்பாடும், வாழ்வாதார மேம்பாடு போன்ற நலத்திட்டங்களையும் மேற்படி நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது.

உதயசூரியன், ரேவடி, தீருவில், சைனிங்ஸ், றெயின்போ, விண்மீன் ஆகிய சிறுவர் கழகங்கள் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

சிறுவர் கழகங்களுக்கு உடல், உள ஆளுமைப் பயிற்சிகள், பல்வேறு போட்டிகள், அரங்கப் பயிற்சிகள், சுற்றுலா, விளையாட்டுப் போட்டிகள் என்பவை நடத்தப்பட்டு வருகின்றன.

சிறுவருக்கான நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் இணைந்து செயற்படுகின்றது. (3-202)

# ஆத்திசூடி, பிறவுண் வீதிகளில் இரு வீடுகளில் திருட்டுக்கள்

யாழ்ப்பாணம், நவ.10

யாழ்.ஆத்திசூடிப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றிலும் யாழ். பிறவுண் வீதி காளி அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திருடர்கள் பெருந்தொகையான பணத்தையும் தங்க நகைகளையும் திருடிச் சென்றுள்ளனர்.

பிறவுண் வீதி, காளி அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றில் அதிகாலை 3 மணியளவில் யன்னல் உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 10 பவுண் தங்க ஆபரணங்கள், கையடக்கத் தொலைபேசி, 10 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

ஆத்திசூடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றிற்குள் அதிகாலை வேளை நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள், தங்க நகைகள் என்பவற்றைக் களவாடியுள்ளனர். குறித்த வீட்டில் உள்ள நபர் ஒருவர் வெளிநாடு ஒன்றிலிருந்து அன்றையதினம் தான் வீடு வந்திருந்தார் எனவும் - அவரது வெளிநாட்டு நாணயங்களே திருடப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பிறவுண்வீதி, கலட்டி அம்மன் வீதி, ஆத்திசூடி போன்ற இடங்களில் அண்மைக் காலமாகக் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (3-8-167)

# புங்குடுதீவு வீதிகள் மோசமான நிலையில்

புங்குடுதீவு, நவ.10

புங்குடுதீவுப் பிரதேசத்தில் உள்ள வீதிகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாததால் அந்த வீதிகளில் போக்குவரத்துச் செய்யமுடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஊரதீவு வீதி, இறுப்பிட்டி வீதி, வல்லன் வீதி, வீராமலை வீதி, கண்ணகையம்மன் வீதி போன்ற வீதிகளே புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளன.

இந்த வீதிகள் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

மழை காலங்களில் வீதிகளில் உள்ள கிடங்குகளில் வெள்ளம் நிற்பதால் பயணிப்பவர்கள் விழுந்து எழும்பவேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

உரியவர்கள் இந்த விடயத்தில் கவனமெடுத்து மேற்படி வீதிகளைத் திருத்தியமைத்துத் தருமாறு அந்தப் பிரதேச மக்கள் கோருகின்றனர். (3-ரி-203)





ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சேதமடைந்த, பழுதடைந்த மீன்பிடிப் படகுகளை நோர்வேயின் உதவியுடன் ஏ.ஜே.இன்டஸ்ரீஸ் நிறுவனம் தும்பளையில் வைத்து இலவசமாகத் திருத்தி வழங்கி வருகிறது.

சேதமடைந்த படகுகள் திருத்தப்படுவதையும் திருத்தப்பட்ட படகுகளுக்கு வர்ணம் தீட்டுவதையும் படங்களில் காணலாம். [படங்கள்: வடமராட்சிச் செய்தியாளர்]

## ஆசிரியர் செயலமர்வு

வலி.தெற்கு,நவ.10

விசேட உதவிகள் தேவைப்படும் பாடசாலை மாணவர்களைக் கையாள்வது தொடர்பான ஆசிரியர் செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 5ஆம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களையும் இக்கருத்தரங்கிலும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-152)

## சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
### புதிய மாணவர் அனுமதி - 2006
*தரம் 1, 6, 9*

*மேற்படி வகுப்புகளில் அனுமதிபெற விரும்பும் மாணவர்களின் பெற்றோர் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 23.11.2005 புதன்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும்.*

(சி/46150)(42-11-15)

**- அதிபர்.**

## IIS

**இக் கல்வி ஆண்டிற்கான இறுதி பிரிவுகள் ஆரம்பம்.**

19.11.2005
21.11.2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

புலமைப்பரிசிலில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களே இச்சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத் தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | --- |
| எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புபவர் | 400 | --- |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | --- |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்:
சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச்சீட்டு
பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)
வீட்டுப் பணிப்பெண்கள் 200 பேர்
வயதெல்லை 19-45

**தொடர்பு: 0777 279813**
**மைக்கல்**

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(42384)(50)

## வேலை வாய்ப்பு

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புகள் உள்ளன.

பயணம் 1 1/2 மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சு வேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாள்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர் / ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் றெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | 20 |
| கைற்றொனிக் மெக்கானிக் | 10 |

**கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்**

பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம் 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதல்கள் இருப்பின் கொண்டுவரவும்.

(42385)

தொடர்பு : மைக்கல்
0777 279813

குறிப்பு : முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

## மகளிருக்கு தையற்பயிற்சி

தென்மராட்சி,நவ.10

கரவெட்டி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினரால் விரைவில் தையல் வகுப்புகள் நடத்தப்படவுள் ளன.

பாடசாலையை விட்டு வெளியேறிய யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தத்தமது பகுதி கிராம அலுவலர் அல்லது சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கிராம அபிவிருத்தி அலுவலர் இ. பரராஜசேகரம் கேட்டுள்ளார்.

(3-117)

## சாவகச்சேரி பிரதேச சபை
*01.01.2006 முதல் 31.12.2006 வரை*
*சந்தை/இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான*
### கேள்வி அறிவித்தல்

*1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி: 23.11.2005 (பி.ப.3 மணிக்கு)*
*2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 25.11.2005 (நண்பகல் 12 மணிக்கு)*
*3. கேள்வி திறக்கப்படும் திகதி: 25.11.2005 (பி.ப.2 மணிக்கு)*

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல. குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர) | கேள்விப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| 1. கொடிகாமம் சந்தைக் குத்தகை (துவிச்சக்கர வண்டிப் பாது காப்பு உட்பட) | 1,200,000.00 | 6,000.00 | 500.00 |
| 2. கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 285,000.00 | 2,000.00 | 200.00 |
| 3. கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 10,000.00 | 1,000.00 | 100.00 |
| 4. கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல.01 | 6,550.00 | 500.00 | 100.00 |
| 5. கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடை இல.02 | 5,600.00 | 500.00 | 100.00 |
| 6. வரணிச் சந்தைக் குத்தகை | 106,200.00 | 1,500.00 | 200.00 |
| 7. வரணிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 10,000.00 | 1,000.00 | 100.00 |
| 8. வரணி - இயற்றாலைச் சந்தை | 1,000.00 | 100.00 | 50.00 |
| 9. கைதடிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 85,200.00 | 1,500.00 | 200.00 |
| 10. கைதடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 25,000.00 | 1,500.00 | 200.00 |
| 11. கைதடிச் சந்தைக் குத்தகை | 38,000.00 | 1,500.00 | 100.00 |

*குறிப்பு:*
- இறைச்சிக்கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
- கேள்விப் பத்திரக் கட்டணம் கேள்வித் தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (15%) மேலதிகமாக செலுத்தப்பட வேண்டும்.
- கேள்விப் பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்.
- கேள்வித் தொகைக்கு மேலதிகமாக வரி 15% செலுத்தவேண்டும்.
- சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு எந்த வரி அறவீடுகளும் மேற்கொள்ளக் கூடாது
- கால்நடைகள் கைதடிக் கொல்களத்தில் வெட்டப்பட்டு சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் இறைச்சி கொண்டுவருதல் வேண்டும்.
- மேலதிக விவரங்களை தலைமை அலுவலகங்களிலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

**கு.ந.பாலச்சந்திரன்**
*செயலாளர்,*
*சாவகச்சேரி பிரதேசசபை,*
*கொடிகாமம்.*

**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**
**08.11.2005.** (சி/46157)(42-11-15)

## ஞானியார் கல்விக் கழகம்

இம்பர்சிட்டி - பருத்தித்துறை நடத்தும்

## பாராட்டு விழா

**வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 112 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு.**

இடம் : யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபம்
காலம்: 2005.11.13 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.30 மணி (புதிய நேரம்)
தலைவர் : திரு.வே. நவரத்தினராசா (தலைவர், ஞானியார் கல்விக் கழகம்)
பிரதம விருந்தினர் :
திரு.பா.சுப்பிரமணியம் (மாவட்ட நீதிபதி, ஊர்காவற்றுறை)
சிறப்பு விருந்தினர்கள்:
திரு. இ. வரதீஸ்வரன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
திரு.க.கமலானந்தன் (உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி வடமராட்சி வலயம்)
திரு.க.யோகேந்திரநாதன் (கிராம அலுவலர், அல்வாய் வடமத்தி)

இந்நிகழ்வில் கலந்து எமது வளரும் பயிர்களுக்கு உரமூட்டுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இம்பர்சிட்டி, பருத்தித்துறை. **-ஞானியார் கல்விக் கழகம்.**

குறிப்பு : மாணவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பிய அழைப்பிதழ்கள் கிடைக்கத் தவறும் பட்சத்தில் மேற்படி பரீட்சையில் சித்தியெய்திய 112 வடமராட்சி மாணவர்களையும் மற்றும் பெற்றோர்களையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இம்பர்சிட்டி,
பருத்தித்துறை. **-ஞானியார் கல்விக்கழகம்.**

(42403)

ஏழை, செல்வந்தா, படித்தோா, பாமரா என நாட்டிலுள்ள பல்வேறு பிரிவினைகள் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை சிதைத்துவிட்டன. சுயாதீன அரசாங்கமொன்றினால் மட்டுமே உங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை

S.V.H.

# மஹிந்த, ரணில் இருவரின் சொத்துப் பிரகடனம்: பிரதிகளை வழங்கத் தேர்தல் ஆணையர் மறுப்பு

## அதனைக் கண்டிக்கிறது சுதந்திர ஊடக இயக்கம்

கொழும்பு, நவ.10

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இருவரின் சொத்துப் பெறுமதி பற்றிய பிரகடனத்தின் பிரதிகளைத் தருமாறு 'ராவய' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விடுத்த வேண்டுகோளை தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நிராகரித்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

வேட்பாளர்களின் தனிப்பட்ட இரகசியங்களைக் காப்பது என்ற அடிப்படையில் இந்த விவரங்களை வெளியிடமுடியாது எனத் தேர்தல் ஆணையாளர் மறுத்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை, தேர்தல் ஆணையாளரின் இந்த நிராகரிப்பு தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் கவலை வெளியிட்டிருக்கிறது. இது தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான இரு வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவினதும், மஹிந்த ராஜபக்ஷவினதும் சொத்துப்பெறுமதியின் பிரதியினைப் பெற்றுக்கொள்வதற்காக ராவய பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோள் தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக சுதந்திர ஊடக இயக்கம் தனது கவலையினைத் தெரிவிக்கின்றது.

தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையில் பொதுமக்களின் தீர்வுக்கு நேரடியாகப் பொருந்தும் தகவலொன்றினை பெற்றுக் கொடுத்தலை நிராகரித்தல் மூலம் தேர்தல் ஆணையாளர் செயற்பட்டுள்ள விதம் மக்கள் அறிந்து கொள்வதற்கிருக்கும் உரிமையை அவர் தவிர்த்துக் கொண்டுள்ளார் என்பதையே புலப்படுத்துகின்றது. இது 1988 ஆம் ஆண்டில் 74 ஆம் இலக்கச் சட்டமூலத்தில் திருத்தப்பட்ட 1975 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கப் பிரிவின் சொத்துப் பெறுமதியைத் தெரிவிக்கும் சட்டமூலத்தில் பொதுமக்களுக்குள்ள சட்டரீதியான உரிமையை மீறுவதாகவும் மக்களுக்குத் தகவகளைத் தெரிந்துகொள்வதற்கிருக்கும் உரிமைக்காச் செயற்படும் இயக்கம் என்ற அடிப்படையில் நாம் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# போராட்டத்தைக் கைவிட்டனர் சுகாதார ஊழியர்

கொழும்பு,நவ.10

சுகாதார சேவை ஊழியர்களால் நேற்று மேற்கொள்ளப்படவிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் கூட்டமைப்பின் செயலாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

சுகாதார ஊழியர்களின் கோரிக்கை நியாயமானது என பிரதமர் ஏற்றுக்கொண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரத்து எழுநூறு சுகாதார ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் சம்பள அதிகரிப்பு பெற்றுத்தருவார் என பிரதமர் தெரிவித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வடமேல் மாகாணத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வடமேல் மாகாணத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் தேர்தலை ஒழுங்கான முறையில் நடத்துவதற்கு பொலீஸார் தமது பங்களிப்பை உரிய முறையில் நல்கவேண்டும்.

- இவ்வாறு வடமேல் மாகாண பிரதி பொலீஸ்மா அதிபர் அசோக ரத்னவீர வேண்டுகோள் விடுத்தார்.

மாகாணத்தில் சகல பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் கடிதம்மூலம் மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலை நேர்மையான முறையில் நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பைச் சரியான முறையில் பொலீஸார் நல்கவேண்டும். கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு கடமையாற்ற வேண்டியது பொலீஸாரின் பொறுப்பாகும்.

பாரபட்சம் காட்டாமல் நியாயமான தேர்தல் நடைபெறுவதை பொலீஸார் உறுதி செய்யவேண்டும்.

- இவ்வாறு பிரதி பொலீஸ்மா அதிபர் கேட்டுள்ளார்.

# என்மீது குற்றம் ஏதாவது இருந்தால் உடனடியாக விசாரணை நடத்துங்கள்!

## இரத்தினபுரி கூட்டத்தில் ரணில் கோரிக்கை

காவத்தை, நவ.10

நான் எந்தவிதக் குற்றச்சாட்டுக்கும் உள்ளாகாதவன். என்மீது குற்றம் இருக்குமாயின் உடன் விசாரணை செய்யுங்கள். நான் எதற்கும் முகம்கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

-இவ்வாறு ஐ.தே. கவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடைபெற்ற ஐ.தே. கவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட ஐ.தே. க அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுசந்த புஞ்சிநிலமே தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து உரையாற்றிபோது கூறியதாவது:-

மக்களுக்குப் பொய் வாக்குறுதிகளை நான் ஒருபோதும் வழங்கமாட்டேன். என்னால் செய்ய முடிந்ததையே நான் சொல்லுவேன். அவ்வாறான அரசியல் பாரம்பரியத்திலே வளர்ந்து பழக்கப்பட்டிருக்கின்றேன்.

உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி பல்வேறு தொழில்வாய்ப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். வெளிநாடுகளில் எமது இளைஞர்களுக்கு பல்வேறு தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

ஏற்கனவே, நான் யுத்தத்தை நிறுத்துவேன் என்று கூறினேன். அது போல் நிறுத்தினேன். சமாதானத்தைக் கொண்டு வந்தேன். அதில் வெற் றியும் கண்டேன்.அதேபோல் என்னால் பூரண சமாதானத்தை கொண்டு வர முடியும்.

எனக்கெதிராக களம் இறங்கியிருக்கும் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவினால் ஒரு காலமும் நாட்டில் சமாதானம் ஏற்படப்போவதில்லை. அவர் எதைக் கூறுகின்றார் என்று அவருக்கே புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை என்னுடன் நேரடி விவாதத்துக்கு வருமாறு நான் அழைக்கின்றேன். அவருடன் பகிரங்க விவாதம் ஒன்றை மேற்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

நாட்டின் நிரந்தர சமாதான சூழலை உருவாக்கும் வகையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனும், விடுதலைப் புலிகள் அமைப்பினருடனும் பேச்சுகளை மேற்கொண்டு இறுதியானதும், உறுதியானதுமான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவேன்.

அடுத்த ஆண்டு முதல் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைக்கும் முகமாக 500 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளேன். இம் மானிய நிதி மூலம் அத்தியாவசிய பொருள்களின் விலை வெகுவாக குறைந்துவிடும். இத்தகைய விலை குறைப்புகளின் மூலம் சமையலறை யுத்தத்துக்குத் தீர்வை ஏற்படுத்த முடியும்.

தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களின் அபிவிருத்திக்காக பல முன்னேற்றகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளேன்.

நாங்கள் எதை செய்தாலும் சமாதானம் அத்தியாவசியமாகும். அதற்கு நாமனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

-இவ்வாறு கூறினார் ரணில் விக்கிரமசிங்க.

(க-3)

# தேசிய ஐக்கிய முன்னணி நாடு முழுவதும் விஸ்தரிப்பு

## அமைச்சர் பேரியல் அறிவிப்பு

மறைந்த தலைவர் எம். எச். எம் அஷ்ரப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணியான 'நுஆ'வை அழித்து விடுவதற்கு அல்லது பறித்தெடுப்பதற்கு சிலர் செய்த முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன.தேர்தல் ஆணையாளரினால் இக் கட்சிக்குரிய சகல அதிகாரங்களும் கிடைத்துள்ளன.

-இவ்வாறு அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

அமைச்சரின் அம்பாறை இல்லத்தில் கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, பகுதிகளில் இருந்து தேசிய ஐக்கிய முன்னணியில் இணைந்து மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க முன்வந்த கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் பேரியல் அஷ்ரப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் அங்கு தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் பின்போடப்பட்டுள்ளதால் அப்பகுதியில் இருந்து எவ்வித புதிய அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையாளரினால் பதிவு செய்இரு சிங்கள கட்சிகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், 'நுஆ' வுக்கான சகல அங்கீகாரம் கிடைத்துள்ளது.

மறைந்த தலைவரினால் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய ஐக்கிய முன்னணி யாப்புக்கமைய சகல சமூகங்களது பிரச்சினைகளுக்கும் தேசிய ரீதியில் குரல்கொடுக்கும். இக்கட்சியில் ஏற்கனவே மறைந்த தலைவரினால் அங்கத்தவர்களாக சேர்க்கப்பட் டவர்கள் இன்றும் இக்கட்சிக்காக உழைத்து வருகின்றனர். அம்பாறை, தெஹியத்தகண்டிய, பதியத்தலாவ, மகாஓயா, ஊகண, இங்குரான, கொழும்பு உட்பட வடக்கு - கிழக்கில் உள்ள சகல முஸ்லிம் தமிழ் பகுதிகளிலும் கிராம மற்றும் மாவட்ட அமைப்புகள் இயங்கி வருகின்றன.

இவற்றினை மேலும் விஸ்தரிப்பதற்கும் புதிய உறுப்பினர்களை மேலும் இணைப்பதற்கும் ஒத்து ழைப்பு தாருங்கள். -இவ்வாறு அமைச்சர் பேரியல் வேண்டுகோள் விடுத்தார்.

வைபவத்தில் சட்டத்தரணி எஸ். எம். யாசீன் , எம். வை. எம். றபீக் , இல்ஹாம், அம்பாறை அமைப்பாளர் பந்துல ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அரசியல் தீர்வு கிட்டினால் மட்டுமே பொருளாதாரம் விருத்தி அடையும்

## வரவு - செலவுத்திட்ட உரையின் ஆரம்பத்தில் நிதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.10

அரசியல் தீர்வொன்றின்மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியுமென்று நிதியமைச்சர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் திட்டவட்டமாகக் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டத்தை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்ற ஆரம்பித்த அமைச்சர், தமது அரசாங் கத்தின் கடந்தகால பொருளாதார மேம்பாட்டை விளக்கிக் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் இக்கட்டான காலகட்டமொன்றில் இருந்தபோது அதனைக் கவனத்திற்கொண்டு சரியான பொருளாதார இலக்குகளை வைத்து, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பினார் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு புகழாரம் சூட்டிய நிதியமைச்சர், ஜனாதிபதி சந்திரிகாவின் கீழ் இரண்டு தடவைகள் வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் கிடைத்தமை தாம் பெற்ற பாக்கியமென்றும் கூறினார்.

அதிகாரப் பரவலாக்கல் மூலமான - பேச்சுகள் மூலமான - தீர்வொன்றின் வாயிலாகவே இனப்பிரச்சினைக்கு முடிவுகட்ட முடியுமென்றும் சுட்டிக்காட்டிய நிதியமைச்சர், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டால் மட்டுமே பொருளாதாரத்தை மேம்படுத்த முடியுமென்றும், ஏற்கனவே நிதியமைச்சர்மார் பலர் இதனை வலியுறுத்தியிருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

# மஹிந்தவின் சிந்தனையே நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடியது

## மாத்தளையில் பிரதியமைச்சர் ரோஹண உரை

காவத்தை, நவ.10

பிரதமர் மஹிந்த சமர்ப்பித்த தேர்தல் விஞ்ஞாபனமான மஹிந்த சிந்தனை நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடியது.

-இவ்வாறு சமுர்த்தி, வறுமை ஒழிப்புப் பிரதி அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

பல்வேறு தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டம் மாத்தளை கெசினோ மண்டபத்தில் நடைபெற்றபோது உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

பிரதமர் மக்கள் முன் சமர்ப்பித்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஆவணமாகும். மஹிந்தவின் சிந்தனையே இந்த நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கவல்லது.அதனைப் பார்த்துப் பிரதி பண்ணியே ரணில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்துள்ளார்.

ரணில் எப்படியேனும் ஜனாதி பதியாகிவிட வேண்டும் என்ற பேராசையில் வாய் கூசாமல் பொய்மூடைகளை அவிழ்த்து விடுகிறார். அவர் பிரதமராக ஆட்சியில் இருந்த காலத்தில் ஒரு அலுவலக ஊழியனைக் கூட நியமிப்பதற்கு வழி இல்லாமல் இருந்தார். ஆனால், ஜனாதிபதியானால் இரண்டரை லட்சம் பேருக்குத் வருடந்தோறும் தொழில் வாய்ப்பு வழங்குவேன் என்று பொய் கூறி ஏமாற்றப்பார்க்கிறார்.

இந்த நாட்டின் எந்த தொழில் துறையை எடுத்துக் கொண்டாலும் அங்கு கடமையாற்றும் தொழிலாளர்கள் இப்போது ஒரு அரசியல் தெளிவையும் விழிப்புணர்வையும் பெற்றுள்ளனர். ஆகவே, அவர்களை ஏமாற்றிவிட முடியும் என்று ரணில் கனவு காண்பது வேடிக்கையாக இருக்கிறது.

சமுர்த்தி நிவாரண முறைக்குப் பதிலாக சியசவிய முறையை ஏற்படுத்தப் போகிறார்களாம். இது ஒன்றே ரணிலுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ போதுமானதாகும்.

-இவ்வாறு கூறினார் பிரதியமைச்சர்.

(க-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.10

வடக்கு - கிழக்கு தமிழ் மொழிமூல ஆசிரியர் தரம் III இற்கு நேர்முகப் பரீட்சைக்காக கல்வி அமைச்சிற்கு அழைக்கப்பட்டு இதுவரை நியமனம் கிடைக்காதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட அனைவரும் நேர்முகப் பரீட்சைக் கடிதத்துடன் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (ஓ-202)

## அந்தண மாணவருக்கு...

யாழ்ப்பாணம்,நவ.10

5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர் களின் விவரங்களை நியந்த்ரீ அமைப்பு கோருகின்றது.

சித்தியடைந்த அந்தண மாணவர்கள் தங்கள் பெயர் விவரங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் 'நியந்த்ரீ' அமைப்புக்கு அனுப்பி வைக்குமாறு அமைப்பின் செயலாளர் கேட்டுள்ளார். (ஓ-202)

## ஓவியப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.10

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை ஓவியப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

'பயமற்ற, அவமானத்துக்குட்படாத, வெறுத்து ஒதுக்கலுக்குட்படாத உலகத்தை உருவாக்க ஒன்றிணைவோமாக' என்ற தொனிப்பொருளில் இப்போட்டியில் 14-18 வயதுக்கிடைப்பட்ட மாணவர்கள் பங்குபற்றலாம்.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் தமது பாடசாலை அதிபர் மூலமாக அனுப்பி வைக்குமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் செயலாளர் கேட்டுள்ளார்.

(ஓ-202)

க.பொ.த பரீட்சையில் சித்தியுள்ளவரா? வேலை இல்லை என்ற கவலை இனியும் வேண்டாம்....

**பயிற்சியும் 100% பணி நியமனமும்**

**கல்வி, நிர்வாகம், மற்றும் தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளில் பணிபுரிவதற்கான பயிற்சி**

1. மூன்று மாத பயிற்சியின்போது முழுமையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
2. விரிவுரை, கதைத்தல், உரையாடல், கேட்டல் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்ட கற்பித்தல்.
3. மூன்று மாத முடிவில் கதைத்தல் மற்றும் ஆங்கில மூலமான செயற்பாட்டுக்கேற்ற முழுமையான தேர்ச்சி.
4. சொல்வள விருத்திப் பயிற்சிக்கான 200 பக்க மொழிமாற்றலுக்காக ரூபா 6000/- ஊதியம் வழங்கப்படும்.
5. பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் அனைவருக்கும் பயிற்சி முடிவில் பணி நியமனம். (பரீட்சை இல்லை)
6. சனி, ஞாயிறு வகுப்பில் கலந்துகொள்வோர் விருப்பமான உடை அணியலாம். ( Saree கட்டாயமில்லை )

**காலம் : 3 மாதங்கள்** **கட்டணம் : 12,000/- மட்டும்**

சில வெற்றிடங்களே உள்ளன. இன்றும் நாளையும் முதலில் வருவோருக்கே பதிவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**SAAMSTECH** 841, Hospital Road, Jaffna. Ph-: 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505

அனேகரின் விருப்பத்திற்கிணங்க மேலும் இரண்டு நாட்களுக்கு மாபெரும் சலுகை நீடிப்பு

**இன்றும் நாளையும் பாடநெறிக்கு பதிவு செய்வோருக்கு ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD இலவசம்**

**ஒவ்வொரு பிரிவும் வாரத்தில் மூன்று நாட்கள், 3 மாதங்கள் அல்லது சனி, ஞாயிறு, 4 மாதங்கள்**

1. **மாணவர்களுக்கான பிரிவு 1** - 7ம் வகுப்பு முதல் 10 ம் வகுப்பு வரை - மாலை 4.30 - 6.00
2. **மாணவர்களுக்கான பிரிவு 2** - 11ம் வகுப்பு முதல் 13 ம் வகுப்பு வரை - மாலை 4.30 - 6.00
3. **வீட்டுப்பெண்களுக்கான பிரிவுகள்** - பிரிவு 1. காலை 10.30 - 12.00 பிரிவு 2. 4.00 - 5.30
4. **இளைஞர் மற்றும் யுவதிகளுக்கானது** - பிரிவு 1. காலை 10.30 - 12.00 பிரிவு 2. 4.00 - 5.30
5. **பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்களுக்கானது** - 1. காலை 6.30 - 8.00 2. மாலை 5.00 - 6.30
6. **அலுவலர்களுக்கான பிரிவுகள்** - பிரிவு 1. காலை 6.30 - 8.00 பிரிவு 2. மாலை 6.30 - 7.30

**கட்டணம் : 3000/- மட்டும்**

ஒவ்வொரு வகுப்பிலும் விரிவுரைகள், உரையாடல்கள், மற்றும் செய்திகள், அரங்கம் அடங்கலான ஒலிப்பயிற்சிகள்

**மூன்றே மாதங்களில் ஆங்கிலம்**

**SAAMSTECH** 841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505

# நல்லூர் பிரதேச சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவரிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவை வருமாறு:-

**கட்டுரை**

*கீழ்ப்பிரிவு* - சி.கௌதமி (கொக்குவில் இ.ஆ.பாடசாலை), ச.தர்சன் (கல்வியங்காடு இ.த.க.பாடசாலை), வி.நிவோதினி (ஆனந்த வித்தியாலயம்).

*மத்தியபிரிவு* - தி.தமயந்தி (கொக்குவில் ஞானபண்டித வித்தி.), வி.சுமந்தரன் (யாழ்.இந்துக் கல்லூரி), த.நாராயினி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

*மேற்பிரிவு* - ஜெ.ஜெயதர்சினி (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.), லோ.கோபிநாத் (யாழ்.இந்துக் கல்லூரி), அ.சேனுகா (அரியாலை சிறிபார்வதி வித்தி.).

*உயர்பிரிவு* - ப.கஜேந்திரன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.தர்சிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**கவிதை**

*கீழ்ப்பிரிவு* - க.கிர்சிகா (கொக்குவில் இ.ஆ.பாடசாலை), யோ.ரஞ்சிதா (யாழ்.இ.ம.ஆ.பாடசாலை), ச.ததுசன் (நல்லூர் ஞானோதயா வித்தி.).

*மத்தியபிரிவு* - த.நாராயினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), த.ஐதுர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.நிவோதன் (நல்லூர் இந்து த.பெ.பாடசாலை).

*மேற்பிரிவு* - ப.ஜெயப்பிரதா (கொக்குவில் ஞானபண்டித வித்தி.), பா.பிரமிளா (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.), லோ.றம்யா (நாயன்மார்கட்டு மகேஸ்வரி).

*உயர்பிரிவு* - கஜலக்ஸ்மி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.பத்மநிருபா (யாழ்.இந்துக் கல்லூரி).

**முதியோர் தினப் போட்டி முடிவுகள் வருமாறு:-**

**கவிதை**

*கீழ்ப்பிரிவு* - க.துவாரகா (ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.), யோ.ரஞ்சிதா (யாழ்.இ.ம.ஆ.பாடசாலை), ச.ததுசன் (நல்லூர் ஞானோதயா வித்தி.).

*மத்திய பிரிவு* - த.நாராயினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), த.ஐதுர்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.நிவோதா (நல்லூர் இந்து.த.பெ.பா).

*மேற்பிரிவு* - ப.ஜெயப்பிரதா (கொக்குவில் ஞானபண்டித வித்தி.), பா.பிரமிளா (கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.), லோ.றம்மியா (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.).

உயர்பிரிவு - ப.நீ.கஜலக்ஸ்மி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.பத்மநிருபா (யாழ்.இந்துக் கல்லூரி).

**கட்டுரை**

கீழ்ப்பிரிவு - இ.சௌமியா (ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.), ஜெ. ஜெனுசியா (நல்லூர் ஞானோதயா வித்தி.), கை.டினோஜன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை).

மத்தியபிரிவு - ந.பிரியங்கா (கொக்குவில் இந்துக் கல்லூரி), க.அனுசாந் (நல்லூர் இந்து த.பெ. பாடசாலை), கி.அபிலாஷா (கலட்டிமெ.மி.வித்தி.).

மேற்பிரிவு - க.பிரதீபா (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.), வி.அனுத்திரிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), இ.நீல்ராஜ் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

உயர்பிரிவு - ப.கஜலக்சுமி (கொக்குவில் இந்துக் கல்லூரி), வ.கஜேந்திரா (யாழ்.இந்துக் கல்லூரி).

(3-190)

## நீங்காத நினைவுகளுடன் ஓராண்டு கண்ணீர் அஞ்சலி

மலர்வு 25 - 12 - 1953



உதிர்வு 10 - 11 - 2004

### திருமதி கமலினி குகதாசன்

அன்னையைப்போல் அன்பு காட்டிய எங்கள் அன்பு அக்காவே
இணைபிரியா சகோதரியே அன்பின் உறைவிடமே
பாசத்தின் தீபமே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றுவிட்டதா
உங்களுடன் வந்த சொந்தங்களும் மறந்து போய்விட்டனவே
எக்காலம் சென்றாலும் எங்கள் நெஞ்சங்களில்
வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள் எங்கள் ஆசை அக்காவே...

திருநெல்வேலி
ஊரெழு
திருமலை.

அக்கா, தம்பிமார், தங்கைமார்,
மச்சாள்மார், மருமக்கள்,
பெறாமக்கள்.

(42601)(26-21-34-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 ☼ 10 ☼ 1936



மறைவு 20 ☼ 11 ☼ 2004

### அமரர் சுப்பையா திருநாவுக்கரசு

(விஜயா கூல்பார் உரிமையாளர்)

*திதி : நவமி 10.11.2005*

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவு
எம்மைவிட்டு!

10 1/1 முருகமூர்த்தி வீதி.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777 250571

(42582)

மனைவி.
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் ஜெயபாலரத்தினம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி)*



இணுவிலைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஜெயபாலரத்தினம் 09-11-2005 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமுதலிங்கம் - யோகதேவி தம்பதியரின் மருமகனும் சீதாலட்சுமியின் அன்புக் கணவரும் (ஓய்வுபெற்ற ரெலிகொம் உத்தியோகத்தர்) ஜெயதர்ஷினி (ஆசிரியர் பயிற்சிக் காலாசாலை, பலாலி) ஜெனார்த்தனன் (லண்டன்), ஜெயகணேஷன் (H.N.D.A, 2ஆம் வருட மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாகீசன் (உதவிச் செயலாளர் பொது நிர்வாக அமைச்சு திருகோணமலை) ஜெயரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவானுஜனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று 09-11-2005 நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ஜெ.ஜெயகணேஷ்
(மகன்).

ஓட்டுமடம்

(42602)
(26-15-34-21)

# பேரினவாதிகளின் தேர்தல் வாக்குறுதிகளை நம்புவதற்குத் தமிழர்கள் ஏமாளிகள் அல்லர்!

## கிளிநொச்சி வெகுஜன ஒன்றியம் அறிக்கை

பேரினவாதிகளான ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் கால வாக்குறுதிகளை நம்புவதற்கு தமிழர்கள் ஏமாளிகள் அல்லர். எனவே, கடந்த கால அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு இம்முறை தேர்தலைப் புறந்தள்ளி ஒதுங்கியிருப்போம்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றது கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவோ மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த யார் தெரிவு செய்யப்பட்டாலும் தமிழினத்திற்கு எந்த வித விமோசனமோ தீர்வோ கிடைக்கப் போவதில்லை. பேரினவாதக் கொள்கைகளோடு தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் வழங்குகின்ற வாக்குறுதிகளை நம்புவதற்கு தமிழர்கள் ஏமாளிகள் அல்ல. கடந்த காலங்களில் பேரினவாத அரசு தமிழர்களிற்கு எதிராக இழைத்த அநீதிகள், ஆக்கிரமிப்புகள், சித்திரவதைகள் போன்றவற்றை மறந்து தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது என்பது எந்தளவிற்கு சாத்தியமானதொன்றாக அமையும்.

கடந்த காலங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிறேமதாச, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க போன்றோரின் பேரினவாதக் கொள்கையின் அடிப்படையிலேயே தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செயற்படுவார்கள் என்பது வரலாற்று உண்மை. பேரினவாதிகளின் கடந்த கால ஆட்சியின் போது தமிழர் தாயகப் பிரதேசங்களில் பெரும் தமிழினப் படுகொலைகளை நடத்தி பல்லாயிரக் கணக்கான எம் உறவுகளை அழித்தனர்.

பொருளாதார வளங்களை அழித்தது மட்டுமல்ல இறுக்கமான பொருளாதாரத் தடைகளைப் போட்டு எமது வாழ்வியலைச் சிதைத்தனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசர காலச்சட்டம் மூலம் பல இளைஞர், யுவதிகளைக் கைதுசெய்தும் சித்திரவதை செய்தும் பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொண்டும் சிறையில் அடைத்தும் கொலை செய்தனர். இவை மட்டுமல்ல இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபை நிராகரித்துச் செயற்பட்ட இவர்கள் கடந்த காலங்களில் தமிழினத்திற்கு உருப்படியான எந்தவொரு தீர்வும் கிடைக்கக்கூடாதென்பதில் உறுதியுடன் செயற்பட்டவர்கள். இவர்களில் இனவாத சக்திகளோடு கூட்டுச் சேர்ந்துள்ள மஹிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் உருவங்கள் வேறுபட்டாலும் கொள்கைகளிலும் பேரினவாதப் போக்கிலும் ஒன்றுபட்டவர்களாகவே உள்ளனர்.

எனவே, வரலாற்றினை அனுபவங்களாகப் பெற்ற தமிழ் மக்களாகிய நாம் ஜனாதிபதித் தேர்தலைப் புறந்தள்ளி, வாக்களிப்பில் இருந்து விலகிக்கொள்வோம். எம்மையும் எமது இனத்தின் இருப்பையும் அழித்தொழிப்பதற்கு உறுதியுடன் போட்டியிடும் வேட்பாளர்களையும் ஜனாதிபதித் தேர்தலையும் தமிழ் மக்களாகிய நாம் நிராகரிப்போம்.




## நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத வீதி

ஒட்டுசுட்டான்,நவ.10

முல்லைத்தீவு, மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட 16 கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாததினால் மன்னார் மாவட்டத்திற்கான போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாந்தைகிழக்கு நட்டாங்கண்டல் வீதியிலிருந்து மன்னார், மடு,பாலம்பிட்டி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் வீதியே இதுவரை புனரமைக்கப்படாமல் இருக்கிறது. இவ்வீதியிலுள்ள பறங்கியாற்றுப் பாலம் அத்துடன் ஏனைய ஆறுகளுக்கான பாலங்களும் நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளன. இதனால் இந்தப் பாதையால் பயணிக்கும் மக்கள் பெருஞ் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இவ்வீதியைத் தாமதிக்காமல் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-341)

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இராமநாதபுரம் மாணவர்கள் கௌரவிப்பு



*சித்தியடைந்த மாணவர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதையும் மாணவர் ஒருவருக்கு பரிசுவழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.*

*(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

வட்டக்கச்சி,நவ.10

இந்த ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இராமநாத புரம் மகாவித்தியாலய மாணவர்கள் 10 பேர் கடந்த 6ஆம் திகதி கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுடன் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற நான்கு மாணவர்களுக்கும் கௌரவிப்பு அளிக்கப்பட்டது.

கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற புதிய கட்டடத் தொகுதித் திறப்பு விழாவினைத் தொடர்ந்து இந்நிகழ்வு இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் க.இரத்தினகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னதாக கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் அழைத்து வரப்பட்டு மேடையின் முன்பாக அமர்த்தப்பட்டனர். பின்னர் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா மாணவர்களுக்கான நினைவுக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் இம் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் செல்வி எஸ்.சர்மிளாவும் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (த-405)

## மக்கள் வங்கியின் திறைசேரிக் குழு முல்லைத்தீவுக் கிளைக்கு விஜயம்

புதுக்குடியிருப்பு,நவ.10

மக்கள் வங்கியின் திறைசேரி முகாமையாளர் அடங்கிய குழு ஒன்று கடந்த வாரம் முல்லைத்தீவு மக்கள் வங்கிக்கிளைக்கு வருகை தந்திருந்தது.

அங்கு அவர்கள் வங்கியின் நிலைமைகள், செயற்பாடுகளைக் கேட்டறிந்தனர்.

அந்தக் குழுவில் மக்கள் வங்கியின் திறைசேரிப் பணிப்பாளர் ந.வசந்தகுமார், மக்கள் வங்கியின் வடவலய உதவி முகாமையாளர் என்.தயானந்தன், வன்னிப் பிரதேச முகாமையாளர் க.ஆனந்தராசா ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

வங்கியின் ஊடாக முல்லைத்தீவுப் பிரதேசமக்களுக்கு எவ்வாறானசேவைகளை வழங்க வேண்டும் எனவும் -

ஏனைய பிரதேசக் கிளைகள் போன்று முல்லைத்தீவுக் கிளையும் கணனி மயப்படுத்தப்படும் என்றும் - அவர்கள் தெரிவித்தனர்.

வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்தனர். (த-353-203)



*முல்லைத்தீவுக் கிளைக்கு விஜயம் செய்த திறைசேரிக் குழுவினர் அங்கு மாலை அணிவித்து வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.*

*(படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

## ஆசிரியர் விடுதிகள் இல்லை பூநகரிப் பாடசாலைகளில்!

பூநகரி,நவ.10

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் சேவாலங்கா நிறுவனம் ''நொய்ப்'' திட்டத்தின் கீழ் சில கிராமங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

அந்தவகையில் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வாடியடி, பள்ளிக்குடா, கிராஞ்சி, வேரவில், நாச்சிக்குடா, இரணைமாதாநகர் போன்ற கிராமங்களிலே இந்த நிறுவனத்தால் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் சுயதொழில் கடன்களை வழங்கவும், கடற்றொழில் உபகரணங்கள், தொழில்ஊக்குவிப்புகள் என்பவற்றை வழங்கவும் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. (த-403)

## 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கை: 12ஆம் ஆண்டு வெற்றிவிழா நிகழ்வு

பூநகரி,நவ.10

1993ஆம் ஆண்டு பூநகரி படைத்தளம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கை வெற்றியின் 12ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் பூநகரியில் நாளை நடைபெறவுள்ளன.

இந்த வெற்றி விழாவுக்கான ஏற்பாடுகளை அரசியல் துறையினர், பூநகரி பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறையினர், பூநகரி வெகுஜன அமைப்பினர், ஊரக வளர்ச்சிக் குழுவினர், வர்த்தக சங்கத்தினர் போன்ற பல்வேறு தரப்பினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

வெற்றி விழா நிகழ்வில் சிறப்புரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. சிறப்பு நிகழ்வுகளாக விடுதலைப் புலிகளின் மகளிர் இசைக் குழுவினரின் இசை நிகழ்வும் சங்கநாதம் நிகழ்வும் இடம்பெறவிருக்கின்றன. (த-403)

## பூநகரி தபாலகத்துக்கு நிரந்தர கட்டடம் இல்லை

பூநகரி தபால் நிலையம் நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில் இயங்கி வருகிறது.

1991ஆம் ஆண்டு பூநகரி மீது சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ''வலம்புரி'' ஆக்கிரமிப்பு படை நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து இயங்கிய இந்தத் தபால் நிலையம், 2003ஆம் ஆண்டு முதல் பூநகரி, வாடியடிப் பகுதியில் மீள இயங்க ஆரம்பித்தது.

இதுவரை நிரந்தரக் கட்டடம் இன்றி தனியார் ஒருவரின் வீட்டிலேயே அத் தபாலகம் இயங்கிவருகின்றது.

இந்தத் தபாலகத்திற்கென நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரை இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. எனவே, உரியவர்கள் இதில் அக்கறை கொண்டு செயற்படவேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (த-403)

## வேரவில் இந்து ம.விக்கு புதிய அதிபர் நியமனம்

முழங்காவில்,நவ.10

வேரவில் இந்து மகாவித்தியாலயத்துக்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அதிபர் க.ஜெயக்குமார் இடம் மாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து துரைராசா இளங்குமரன் புதிய அதிபராக நியமனம் பெற்றுள்ளார். (த-323-203)

## வவுனியா வடக்கில் 26 பாடசாலைகள் படையினரின் பாதுகாப்பு வலயத்துக்குள்!

ஒட்டுசுட்டான்,நவ.10

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பு காரணமாக 26 பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்க முடியாதுள்ளன.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் உள்ள 89 பாடசாலைகளும் சிறிலங்காப் படையினரின் ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் பலத்த சேதமடைந்தன.

'ஓயாத அலை 3' நடவடிக்கை மூலம் வவுனியாப் பிரதேசம் மீட்கப்பட்ட பின்னர் 63 பாடசாலைகள் மீண்டும் சொந்த இடங்களில் இயங்கி வருகின்றன.

ஏனைய 26 பாடசாலைகளிலும் சிறிங்கா இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலும் மக்கள் மீளக் குடியமர முடியாத இடங்களிலும் இருக்கின்றன. இதனால் அந்தப் பாடசாலைகள் ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து இயங்கிவருகின்றன.

இந்தப் பாடசாலைகளின் வளங்கள் யாவும் படையினரால் அழிக்கப்பட்ட நிலையில் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் சிரமங்களின் மத்தியில் மேற்படி பாடசாலைகள் இயங்கி வருகின்றன. (த-341)

# அமெரிக்கக் கூட்டுப்படைகள் மேலும் ஓராண்டுக்கு ஈராக்கில் நிலைகொள்வர்

## ஐ.நா. பாதுகாப்புச் சபை அங்கீகாரம்

ஜெனீவா,நவ்.10

அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைகள் மேலும் ஓர் ஆண்டுக்கு ஈராக்கில் நிலைகொண்டிருப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஈராக்மீது அமெரிக்கப்படைகள் ஆக்கிரமிப்பை மேற்கொண்டபின்னர் அங்கு அமெரிக்க ஆதரவுடன் அரசு அமைக்கப்பட்டது. தற்போதைய ஈராக் பிரதமர் இப்ராஹிம் ஜபாரி அண்மையில் ஐ.நா. சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில்,

2004ஆம் ஆண்டு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் நிலைகொள்வதற்கான காலக்கெடு இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. இதனை மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிக்க ஐ.நா. சபை அங்கீகாரம் வழங்கவேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில் ஈராக்கின் பாதுகாப்பையும், அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்தவும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் அங்கு நிலைகொண்டிருக்க வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், ஓராண்டுக்கு ஈராக்கில் அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் நீடிக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆதரவாக வாக்களித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை அமெரிக்கா வரவேற்றுள்ளது. ஈராக் ஜனாதிபதி ஜலால் தல்பானியும் ஐ.நாவின் தீர்மானத்தை வரவேற்றுள்ளார்.

அடுத்த மாதம் 15ஆம் திகதி ஈராக்கில் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் அங்கு தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கக்கூடும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கில் தற்போது ஒரு லட்சத்து 80 ஆயிரம் வெளிநாட்டுப்படைகள் நிலைகொண்டுள்ளன. இவர்களில் ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேர் அமெரிக்கப் படையினர் ஆவார்கள். 23 ஆயிரம் பேர் ஏனைய நாட்டுப் படையினராவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானுக்கு இந்தியா ஆதரவு

புதுடில்லி,நவ.10

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான 'சார்க்'கில் உறுப்பு நாடாக ஆப்கானிஸ்தானைச் சேர்க்க இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது. பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் சார்க் அமைப்பின் உச்சிமாநாடு நடைபெறவுள்ளது. சார்க் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதிநிதியாகச் செல்லும் இந்தியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் அகமத் புதுடில்லியில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருப்பதாவது:-

''சார்க் அமைப்பில் ஆப்கானிஸ்தான் சேருவதை நாங்கள் வரவேற்கிறோம். இந்த மாநாட்டின்போது சார்க் அமைப்பில் ஆப்கானிஸ்தானையும் சேர்க்கும் திட்டத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கும்''- என்றார் அவர்.

இந்த மாநாட்டில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் கலந்துகொள்ள இருந்தார். எனினும், அவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமையால் பிரதி வெளிவிவகார அமைச்சர் அகமத் கலந்துகொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் சதாம் ஹுசைன் தரப்பில் மற்றுமொரு சட்டத்தரணி கொலை!

பக்தாத்,நவ.10

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சார்பில் ஆஜராகும் இன்னொரு வழக்கறிஞர் பக்தாத்தில் கொல்லப்பட்டுள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

அமெரிக்கக் கூட்டுப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மீது பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப் பட்டுள்ளன.

இதுதொடர்பான விசாரணைகளுக்காக சதாம் உட்பட அவரின் சகாக்களுக்கான வழக்கறிஞர் குழுவினர் ஆஜராகிவருகின்றனர்.

சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை கடந்த 19ஆம் திகதி இடம்பெற்றது. மறுநாள் சதாம் தரப்பு வழக்கறிஞர் ஒருவர் கொல்லப்பட்டார். தற்போது கொல்லப்பட்டவர் இரண்டாவது வழக்கறிஞர் ஆவர்.

தமது பாதுகாப்புக்குறித்து கவலை தெரிவித்து சதாம் மீதான விசாரணையை வேறு நாட்டுக்கு மாற்றவேண்டும் என சதாம் தரப்புக்கு ஆஜராகும் வழக்கறிஞர்கள் அறிக்கை வெளியிட்ட மறுநாள், வழக்கறிஞர் அடெலி அல் சபைதி என்பவர் தலைநகர் பக்தாத்தில் காரில் சென்றுகொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோரால் வழிமறித்து தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்கவுள்ளதாக ஈராக் அரசு அறிவித்துள்ளது எனினும், இந்த விடயத்தில் அரசு அக்கறை காட்டவில்லையென வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

# பைபிளை அச்சிட்டு வெளியிட்ட சீன அமைச்சருக்கு 3 ஆண்டு சிறை!

சீனாவில் சட்டவிரோதமாக 'பைபிள்' நூலை அச்சிட்டு வெளியிட்ட கிறிஸ்தவ புரட்டஸ்லாந்து மதப்பிரிவைச் சேர்ந்த அமைச்சர் ஒருவருக்கு மூன்று ஆண்டுச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

புரட்டஸ்லாந்து மதப் பிரிவைச் சேர்ந்த சீன அமைச்சர் கய் சூவ்கா மற்றும் அவரின் குடும்பத்தினர் அரசின் அனுமதியின்றி பைபிள் மற்றும் சில கிறிஸ்தவப் புத்தகங்களை அச்சிட்டனர் எனக் குற்றஞ்சாட்டி கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டனர். இதுதொடர்பான வழக்கு பீஜிங்கில் உள்ள மக்கள் நடுவர் நீதிமன்றில் நடைபெற்றது. இதில் அமைச்சர் கய் சூவ்காவிற்கு சட்டத்திற்கு புறம்பான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தகவலை அவர்களின் வழக்கறிஞர் ஜாங் ஜிங்சி என்பவர் தெரிவித்தார்.

இந்தத் தண்டனையை எதிர்த்து இவர்கள் இன்னும் 10 நாள்களுக்குள் மேல் முறையீடு செய்வர் எனவும் அவர் தெரிவித்தார்.

மத நம்பிக்கையற்ற நாடான சீனாவில் பைபிள் மற்றும் இதர மதங்கள் பற்றிய புத்தகங்கள் வெளியிடுவதற்கும், அச்சிடுவதற்கும் அந்த நாட்டின் மத விவகாரத் துறையின் அனுமதி பெறவேண்டும். அங்குள்ள கடைகளில் பைபிள்களை தாராளமாக விற்கமுடியாது; வாங்கவும் முடியாது. இதனால் சீனாவை உலகஅளவில் மத சகிப்புத் தன்மை அற்ற நாடு என விமர்சிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சீனாவிற்கு அடுத்த சில நாள்களில் விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் கிறிஸ்தவ அமைச்சர் ஒருவருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

# டெல்லி குண்டுவெடிப்பின் முக்கிய சூத்திரதாரி கைது!

புதுடெல்லி,நவ.10

புதுடெல்லியில் அண்மையில் நிகழ்ந்த தொடர்குண்டுவெடிப்புகளுடன் தொடர்புடைய முக்கிய தீவிரவாதி ஒருவர் இந்திய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். விசாரணைகளின்போது பல முக்கிய தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பல தகவல்கள் வெளியாகின

காஷ்மீர் மாநிலத்தில் பனிஹெல் பகுதியில் ஹிஸ்புல் - முகாஜிதீன் என்ற தீவிரவாத அமைப்பைச்சேர்ந்த முகமத் முகைதீன் என்பவர் தங்கியுள்ளார் எனக் கிடைத்த உளவுத் தகவல்களைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது அவர் கைதுசெய்யப்பட்டார். விசாரணைகளின்போது அவர் பல முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெல்லி குண்டுவெடிப்புகளுக்கு லஷ்கர் - இ- தொய்பா என்ற அமைப்பே பொறுப்பாக இருந்தது. அந்த அமைப்பின் கட்டளைக்கு இணங்க ஹிஸ்புல் - முகாஜிதீன் அமைப்பைச் சேர்ந்த அப்துல் ஹமீத் என்பவரால் முகமத் முகைதீனிடம் தாக்குதலுக்கான பொறுப்பு வழங்கப்பட்டது.

அவரே இந்த குண்டுவெடிப்புகளை டெல்லியில் திட்டமிட்டு நடத்தியுள்ளார். தாக்குதலின் பின்னர் முகைதீன் ராஜஸ்தான் மாநிலம் சென்று அங்கிருந்து காஷ்மீருக்குச் சென்றுள்ளார். இந்த நிலையிலேயே இவர் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரான செல்வி ஸ்ரெலா சூரியா ஜேம்ஸ் என்பவரின் அன்புத் தந்தையாரான

**துரையப்பா பிலேந்திரன் ஜேம்ஸ்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

(42624)(32-16-12-30)



## ஹற்றன் நஷனல் வங்கி

நடத்தும் 2005ஆம் ஆண்டுக்கான

## கூடைப்பந்தாட்டப் போட்டிகள்

கழகங்கள் - ஆண்கள், பெண்கள்
பாடசாலைகள் - ஆண்கள், பெண்கள்

மேற்படி போட்டியில் பங்குபற்றவிரும்பும் கழகங்கள், பாடசாலைகள் தங்களது விண்ணப்பங்களை ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளையில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

விண்ணப்ப இறுதித் திகதி : 14/11/2005
அணி ஒழுங்குத் தெரிவு : 16/11/2005 மாலை 4.30 மணி
இடம் : ஹற்றன் நஷனல் வங்கி யாழ். கிளை

அணி ஒழுங்குத் தெரிவின் போது பங்குபற்றும் கழகங்கள், பாடசாலைகளில் இருந்து ஓர் உறுப்பினரை சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- முகாமையாளர்.

(அ/45797) (24-12-16-30)


# நடிகை ஜோதிகாவை மணக்கிறாராம் சூர்யா

நடிகை ஜோதிகாவுடன் அடுத்த ஆண்டு தமக்கு திருமணம் நடை பெறும் எனநடிகர் சூர்யா பரபரப்பு பேட்டியொன்றை வழங்கியுள்ளார்.

தமிழ்த் திரையுலக நடிகரான சூர்யா ஹைதராபாத் நகருக்கு சென்றிருந்த சமயம் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

சூர்யாவின் திருமணம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

ஜோதிகாவுடனான திருமணம் அடுத்த ஆண்டு நடைபெறும் சாத்தியம் உள்ளது. எனது தங்கையின் திருமணம் எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதன்பின்னர் தான் எனது திருமணம் பற்றி முடிவெடுப்பேன் என்றார் அவர்.

அண்மைக்காலமாக சூர்யா - ஜோதிகா காதல் குறித்த செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பறவைக் காய்ச்சல் நோய்க்கு வியட்நாமில் ஒருவர் பலி!

வியட்நாமில் பறவைக்காய்ச்சல் நோய்க்கு ஒருவர் பலியாகியிருக்கிறார். ஆசியாவில் இடம்பெற்றுள்ள மிகப்பிந்திய பறவைக்காய்ச்சல் மரணமாகும் இது. ஹனோய் நகரைச்சேர்ந்த இந்தமனிதர் கோழி இறைச்சி சாப்பிட்டதின் பின்னர் இலேசான காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து ஒக்டோபர் 26ஆம் திகதி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். சுவாசிப்பதில் கஷ்டமுற்ற அவர் சில நாள்களின் பின் மரணமானார்.

2003 ஆம் ஆண்டிலிருந்து ஆசியாவில் 64 பேர் பறவைக்காய்ச்சலினால் மரணமாகியுள்ளனர். வியட்நாமில் மட்டும் 42பேர் இறந்துள்ளார்கள். கடைசியாக இறந்தவருக்கு 35 வயது. தனது குடும்பத்தினருடன் கோழி இறைச்சி சாப்பிட்டதன்பின் நோய்வாய்ப்பட்ட இவர் ஆஸ்பத்திரியில் மரணமானார். ஆனால், அவருடைய குடும்பத்தினர் அனைவரும் சுகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. (ப)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 729
திகதி 08-11-2005
டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல. 4866181-4880759

வெற்றி இலக்கங்கள்
**23 43 45 48**

லக்கினம் தனுசு

ஜக்பொட் பரிசு ரூபா. 10,00,000/- வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 17,07,650/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,16,847 | 10/- | 31,68,470/- |
| 2.இலக்கங்கள் | 29,107 | 20/- | 5,82,140/- |
| 1.இல லக்கினம் | 28,758 | 30/- | 8,62,740/- |
| 2.இல லக்கினம் | 2,642 | 100/- | 2,64,200/- |
| 3.இலக்கங்கள் | 773 | 500/- | 3,86,500/- |
| 3.இல லக்கினம் | 68 | 5,000/- | 3,40,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 60,04,050/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 70,56,300/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 70,56,300/- தொடர் இல. 5813966 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

குருநாகல் 4868771-4-39
இரத்தினபுரி 4869895-3-44
கண்டி 4873973-7-56
களுத்துறை 4878090-4-95
மாத்தளை 4868221-5-39

NSB தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்

## ஏல விற்பனை

24.11.2005 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக் கிளையில் வைத்து பாவித்த தளபாடங்கள் ஏல விற்பனையில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம். விவரங்களை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் பார்வையிட முடியும்.

24.11.2005 மாலை 1 மணிமுதல் பொருள்களை யாழ்.கிளையில் பார்வையிட முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

தவிர்க்க முடியாத காரணங்கள் ஏற்படும் பட்சத்தில் ஏலதிகதியில் மாற்றம் செய்யும் உரிமை வங்கிக்கேயுரியது.

(சி.46161) முகாமையாளர்.



We Serve

## வடமராட்சி அரிமாக் கழகத்தினரால்

28.10.2005ஆம் திகதி நடத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பரிசு | பெறும் இல. | - | 1686 |
| இரண்டாம் | ,, ,, | - | 3318 |
| மூன்றாம் ,, | ,, | - | 2480 |
| நான்காம் ,, | ,, | - | 1612 |
| ஐந்தாம் ,, | ,, | - | 6662 |

பத்து ஆறுதல் பரிசு பெறும் இலக்கங்கள்

| | |
|---|---|
| 6630 | 4012 |
| 4731 | 1444 |
| 1732 | 1089 |
| 4237 | 5510 |
| 0126 | 6523 |

வடமராட்சி அரிமாக்கழக செயலாளர்.

(32-54-12-17)



## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயாளிக்கு சிறுநீரகம் அவசியம் தேவைப்படுகின்றது. சிறுநீரகம் ஒன்றை வழங்கி உதவக்கூடியவர்கள் எவராவது இருப்பின் தயவு செய்து எம்முடன் தொடர்புகொள்ளவும். ['O' குறூப்].

சன்மானம் வழங்கப்படும்.

T.P: 0777 667703

021 226 3518

(42623) (32-54-12-17)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய

செல்வி

### ஆர்த்திகா குமரேஸ்

அவர்களின் 10 ஆவது பிறந்த தினத்தில் வாழ்த்துவதோடு பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருநெல்வேலி. (42637) (54-12-17) சித்தப்பாமார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சந்திரசேகரம் - இந்திராணி தம்பதிகளின் புதல்வன் **டிலக்ஷன்**

யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 2005ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த டிலக்ஷனை பல்கலையும் கற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம். மேலும் இவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அம்மன் கோயில் வீதி,
நாவற்குழி கிழக்கு,
தச்சன்தோப்பு. (42626) (32-54-12-17)

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
பெரியப்பா குடும்பம், சித்தி குடும்பம்,
மாமா குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



கே.கே.போன் சேவிஸ் உரிமையாளர்
சிறீகுமரன் (குமரன்)
அவர்களின் பாசமிகு தந்தையார்

### நடராஜா சண்முகராசா

அவர்கள் நேற்று (09.11.2005) புதன்கிழமை காலமான செய்திகேட்டு துயர் அடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்,

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 1, நவீன சந்தை மேல் மாடி. (42636) (33-54-12-17) K. K. போன் சேவிஸ்.

## அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள உடுவில் மல்வத்தை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட் டுள்ளது.

இப்பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 2-II, தரம்-III, இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு - I, வகுப்பு 2-I, வகுப்பு 2-II ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

வலிகாமம் கல்வி வலயத்தில் காணப்படும் விண் ணப்பப்படிவத்திற்கமைய முறைப்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து இம்மாதம் 11ஆம்திகதிக்கு முன் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-152)

## சட்டவிரோத மணல் அகழ்வு

யாழ்ப்பாணம், நவ.10

அரியாலைப் பகுதியில் மீண்டும் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டது.

தொடர்ந்த பெய்துவரும் மழையைப்பயன் படுத்தி மணல் அகழ்வு தொடர்வதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-15)

## உடுவிலில் தையல், மனையியல் பயிற்சி

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பெண்களுக்கான தையல்,மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறி நடத்தப்படவு ள்ளது.

18வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான இப்பயிற்சிநெறி சங்குவேலி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் உடுவில் பிரதேச செயலர் பரிவுக்குட்பட்ட பெண்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)












## மரண அறிவித்தல்கள்

### முத்தையா இராசரத்தினம்



(அரசாங்க விவசாய திணைக்கள ஓய்வுபெற்ற சாரதி, நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான -உறுப்பினர்)

நவாலி வடக்கு - புலவர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராசரத்தினம் நேற்று (09.11.2005) புதன்கிழமை மாலை 5.40 மணியளவில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா- பொன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை-நாகம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஷ்வரியின் அன்புக் கணவரும் தங்கரத்தினம், ருக்குமணி, ஆகியோரின் சகோதரரும் அமரர் இராசேந்திரம், அமரர் நாகராசா, புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம், அமரர் குமரையா, வில்வராசா ஆகியோரின் மைத்துனரும் உஷா,உமா, சிறிகாமராஜ், பத்மஸ்ரீதரன் (லண்டன்), அனுஷா ஆகியோரின் தந்தையும் செல்வராசா, சுலோஜினாவின் மாமனாரும் சுகனியா, லாவண்யா, (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி), நிறோஸ் (மாணவன் - நவாலி மகா வித்தியாலயம்), சுலக்ஷன் (மாணவன்-நவாலி வேலக்கை விவேகானந்தா வித்தியாசாலை), சேதுயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.11.2005) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நவாலியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் நவாலி, ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய். (46162) (54-12-17)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா

(சிவக்கொழுந்து)



பளையைப் பிறப்பிடமாகவும் கரம்பகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா அவர்கள் நேற்று (09.11.2005) புதன்கிழமை அதிகாலை 4 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பூபாலசிங்கம், மகேஸ்வரி (இயக்கச்சி), குலவீரசிங்கம் (சுவிஸ்), சிவபாலசற்குணம், (ஓய்வு பெற்ற பெ[illegible]ஸ்), சிவராசா (ஆஸ்திரேலியா), சத்தியேஸ்வரி (ஓய்வுபெற்ற [illegible] வரைஞர்), இகபரேஸ்வரி (ஆசிரியை, யா/அரியலை ஸ்ரீபாரதி வி[illegible]யாசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கலஞ்சென்ற நாகரத்தினம், செல்வநாயகி (இந்தியா), மங்கையர்க்கரசி (ஆசிரியை, யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்), ரமா (ஆஸ்திரேலியா), கணபதிப்பிள்ளை (அதிபர், யா/போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), யோகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் விக்கினேஸ்வரன், மயூரன், காயத்திரி (லண்டன்), கஸ்தூரி (சுவிஸ்), கல்பனா (லண்டன்), கோபிகா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை 2004 கணிதம்), தனுசிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 2005 உயிரியல்), மோகனராஜ் (யாழ். இந்துக்கல்லூரி 2007 கணிதம்), கௌசிகா (ஆனைப்பந்தி மெ.மி.வி), பைரவி (ஆஸ்திரேலியா), நந்தேஸ் (ஆஸ்திரேலியா), கஜரூபன் (கிழக்குப் பல்கலைக் கழகம்), கஜந்தினி (வேம்படிமகளிர் உயர்தர பாடசாலை 2007 உயிரியல்), கஜசுமணி (சாவகச்சேரி இந்தக் கல்லூரி), கோபிராஜ் (யாழ். இந்துக் கல்லூரி 2005 உயிரியல்), குணராஜ் (யாழ். மத்திய கல்லூரி), சிவமாலினி, சாந்தகுமார், கிருபாகரன், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் குபனியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (09.11.2005) புதன்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (42632) (54-12-17)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### தில்லையம்பலம் சிறீகாந்தா

நல்லூர் செட்டித்தெருவை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தில்லையம்பலம் சிறீகாந்தா அவர்கள் 08.11.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தில்லையம்பலம்-காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும், அமரர் நாகலிங்கம்-பொன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும் தையல் நாயகம் அவர்களின் அன்புக் கணவரும், பகிரதன், கஜேந்திரன், சஞ்செயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவதர்சினியின் அன்பு மாமனாரும், திருமதி வசந்திசபாநாயகம், திருமதி கமலா சிங்கநாயகம், நடேசன், அமரர் ராஜகோபால் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2005) வியாழக்கிழமை கல்கிசையில் நடைபெற்று, கிரிலப்பனை மயானத்தில் தகனக் கிரியைகள் இன்று நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ. பே.:
0112559390 (42634) (54-12-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### ஆறுமுகம் கந்தசாமி

காரைநகர், களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான ஆறுமுகம் கந்தசாமி அவர்கள் நேற்று (09.11.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராமர் ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மருதானை தம்பையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் வளர்மதி, பாலகிருஸ்ணன் (பாலையா- லண்டன்), ஜெயமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம், Dr.கணேஸ்வரராஜா (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயசக்தி, ஷரூபன், விதுஷன், திவ்வியா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2005) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 26, உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை.
தொ. பே. 0112505107 (42633) (54-12-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(களபூமி, காரைநகர்).

### கே.ஆர்.நாராயணன் காலமானார்

இந்திய முன்னாள் ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் (வயது -84) நேற்று மாலை காலமானார். கேரளாவைச் சேர்ந்த நாராயணன், மிகவும் தாழ்த்தப்பட்ட இனத்தில் இருந்து இந்தியாவின் குடியரசுத் தலைவராக மிகஉயர்ந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவராவார்.

கடந்த சிலநாள்களாக இவர் கோமாநிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### டக்ளஸின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் தேடி கொழும்புக்கு வந்தவர்கள் தாம் என இந்த இளைஞர்கள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ள போதும், இவர்கள் மீது சந்தேகம் கொண்ட நாரஹென்பிட்டிய பொலீஸார் மேலதிக் விசாரணைகளை நடத்திவருன்றார். (எ-க)

### அரசாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் நேற்றுமாலை 'உதயன்'இற்குத் தெரிவித்தன.

அதேவேளை, கடந்த 18 மாதங்களாக சம்பளம் பெறாமல் அமைதி முயற்சிகளுக்காக ஜயந்த தனபால ஆற்றிய சேவைகளுக்காக ஜனாதிபதி தமது நன்றியைத் தெரிவித்திருக்கிறார் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

சுவீடனில் நடைபெற்றுவரும் மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக ஜயந்த தனபால அங்கு சென்றிருப்பதால் அவரை உடனடியாகத் தொடர்புகொள்ள முடியவில்லை. அதனால், அவரது கருத்தைக் கேட்டறிய முடியாமல் போய்விட்டது.

இதற்கிடையே ஜனாதிபதியின் பேச்சாளரும், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ், பொருளாதாரத்துறை ஆலோசகர் மனோ தித்தவெல மற்றும் பல உயரதிகாரிகள் இன்னும் சில தினங்களில் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது. (எ-க)

### படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் கூறப்பட்டது.

ஒரு எலும்புக் கூடுமுழுமையாகவும், மற்றைய எலும்புக் கூட்டில் ஏனைய பகுதிகள் சிதைந்து காணப்பட தலைப் பகுதி மட்டும் முழுமையாக இருந்தது. மேற்படி எலும்புக் கூடுகளின் அருகில் பெண்களின் உள்ளாடைகள் சிதைந்த நிலையில் காணப்பட்டன. இது குறித்து சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர் அப்பகுதி கிராம அலுவலரிடம் நேற்றிரவு முறைப்பாடு செய்யவிருந்தார் என்று உதயன் செய்தியாளர் கூறினார். (எ-45)

### எல்லைக் கோட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உத்தரவைநேற்று விடுத்தது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்கள் இந்த அடிப்படை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜெயசிங்க, நிமல் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தாம் செய்திருக்கும் ஒழுங்கு முறைகள் தொடர்பாக 10 அம்சத் திட்டம் ஒன்றை தேர்தல் ஆணையாளர் இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்குகளில் முதலாம் எதிர் மனுதாரர் என்ற அடிப்படையில் சமர்ப்பித்திருந்தார்.

அவற்றை நீதிமன்றம் அப்படியே ஏற்றுக்கொண்டது.

அதேவேளை, கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டது போல எல்லைக் கோட்டிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி அரைக் கிலோ மீற்றர் தூரத்தில் அமைப்பதற்குப் பதிலாக, ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைக்கும்படி நீதியரசர்கள் நேற்றுத் தமது உத்தரவில் தெரிவித்தனர்.

வழக்குகள் ஜனவரி 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. (எ-க-8-14)

### அரசு முன்வைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் விதியும் மரபும்.

இவ்வாறு, அங்கீகாரம் பெறாவிட்டால் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் செல்லுபடியற்றதாகிவிடும்.

அதுதான் இன்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வரவு - செலவுத்திட்டத்திற்கும் ஏற்பட்டுள்ளது என்றும் கபீர் காஸிம் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக்கூறினார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது 'மஹிந்த சிந்தனை'யின்மூலம் அரசாங்க ஊழியர்கள், தாய்மார்கள், குழந்தைகள், பாடசாலை மாணவர்கள் என ஒட்டு மொத்தமாக எல்லோரையும் ஏமாற்றிவிட்டார்.

ஒரு தேர்தல் நடைபெறவுள்ள வேளையில் வரவு - செலவுத்திட்டம் ஒன்றைச் சமர்ப்பிப்பது சட்டவிரோதமானது. தேர்தல் முடியும் வரை அதைப் பிற்போடவேண்டும் என ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

தாம் இல்லாத நேரத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான் வரவு - செலவுத்திட்டம் தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், எனினும் இதனை நிதி அமைச்சரின் கவனத்திற்குத் தாம் கொண்டு வருகிறார் என்றும் ஜனாதிபதி, கரு ஜயசூரியவுக்குப் பதில் அளித்துள்ளார்.

ஆனால், பிரதமரும் அவரது சகாக்களும் ஜே.வி.பியினருடன் சேர்ந்து விடாப்பிடியாக வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்கவைத்து இப்போது மூக்குடைப்பட்டுவிட்டனர்.

அவர்கள் வெட்டிய குழிக்குள் அவர்களே விழுந்து விட்டனர். எனவே, இதன்பின்னும் தொடர்ந்து பிரதமர் தனது மஹிந்த சிந்தனைகளுடன் மக்கள் முன் செல்ல முடியாது. மஹிந்தவின் சிந்தனைகளை அவர் உடனடியாக வாபஸ் பெறுவதே ஒழுங்கானது. - எனவும் கபீர் காஸிம் எம்.பி. கூறினார். (எ-க)

### அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார். அத்துடன் மஹிந்தவின் சிந்தனைத் திட்டத்துக்கு அமைய ஏற்கனவே, நிதியமைச்சரால் வரவு - செலவுத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட சில யோசனைகளைக் கூட ஜனாதிபதி அதிலிருந்து நீக்கிவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் வரவு - செலவுத்திட்ட யோசனைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சிலவிடயங்களைச் சேர்த்துக் கூறுமாறு மூத்த அமைச்சர்கள் சிலர் நிதி அமைச்சரிடம் கடைசிநேரத்தில் வற்புறுத்தலுடன் கூடிய வேண்டுகோளை விடுத்தனர் என்றும், ஆனால் அதனை நிதியமைச்சர் நிராகரித்து விட்டார் என்றும் மேலும் கூறப்பட்டது.

இந்நிலையில் தமது தேர்தல் யோசனைகள் வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படாமை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனக்கு நெருக்கமானவர்களிடம் கடுமையான ஆட்சேபத்தையும், அதிருப்தியையும் வெளி யிட்டுள்ளார் என மேலும் கூறப்படுகிறது. (எ-க)

### ஹெல்பிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை மோசடி இடம்பெற்றிருக்கிறது. மக்களின் நலன் கருதியே நல்ல நோக்கத்துக்காக இந்த விடயத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பிரதமரைப் பழிவாங்கும் நோக்கம் எதுவுமில்லை - உண்மையக் கண்டுபிடிப்பதைத்தவிர.

இந்த விடயத்தை விசாரிக்கும் பொறுப்பை குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர் ஈ.கஜநாயக்காவிடம் ஒப்படைத்தேன். அவர் கபீர் காஸிமின் வாக்கு மூலத்தை ஜூலை 19 ஆம் திகதியும், பிரதமரின் அலுவலக அதிகாரிகளை ஜூலை 22 ஆம் திகதியும் விசாரித்து வாக்கு மூலங்களைப் பதிந்தார்.

நிதி தவறான முறையில் கையாளப்பட்டிருப்பது பற்றிய விடயங்கள் விசாணைகளின் போது வங்கிக் கணக்குகளின் அடிப்படையிலான ஆதாரங்களினால் தெரியவந்தது.

- இப்படி சத்தியக்கடதாசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஹெல்பிங் அம்பந்தோட்டை' விசாரணையை இடைநிறுத்துமாறு மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த விடயம் தொடர்பாக குற்றப் புலனாய்வு விசாரணைக்கு இடைக்காலத் தடைவிதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே. (எ-க-8-14)

### யாழ். கைலாசபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு நேற்றிரவு சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது.

மேற்படி செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

தமிழ் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக 6 தலைப்புகளில் விடயங்கள் தயாரிக்கப்பட்டு அவை தொடர்பாக அறுவர் இந்த மாநாட்டில் பேச்சு நடத்துவர்.

- இன்றைய தமிழ் மாணவர்களின் கள நிலை.
- பல்கலை. அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்.
- தமிழ் பாடத்திட்டத்தில் மறைக்கப்படுபவையும், நீக்கப்படுபவையும்.
- இலங்கையின் கல்விக் கொள்கையில் உள்ள குறைபாடுகள்.
- தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளும் அவை மாணவர்களைப் பாதிக்கும் விதமும்.
- சுனாமியும் மாணவர்களும்
- தமிழ் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உங்கள் பதில் என்ற தலைப்புக்களில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும்.

மேற்படி ஆய்வரங்கம் நிறைவடைந்தவுடன் மாணவர் எழுச்சிப் பிரகடனம் வெளியிடப்படும்.

தொடர்ந்து ஆய்வரங்கில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவரும் 5 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சில விடயங்கள் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வாறு பிரிக்கப்படும் குழுக்களின் விவரம் வருமாறு:-

- தினமும் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து தரவுகளைச் சேகரிக்கும் குழு.
- மாணவர்களின் இடைவிலகல், வறுமை தொடர்பான விவரங்களைச் சேகரிக்கும் குழு.
- பெண் மட்டும் அடங்கும் பெண்கள் அமையம்.
- ஆரம்ப, இடைநிலை, உயர்தரம் ஆகியவற்றில் கல்விகற்கும் மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்கான குழு.

இந்த மாணவர் எழுச்சி மாநாட்டில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் அழைக்கப்பட்ட மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொள்வர். (எ-12)


SKY COMPUTER SYSTEMS.
89A, Kandy Road, Jaffna.
Tel: 0777 305533
For all your Computer Requirements
Pentium IV Pentium III Pentium II
Genuine intel Dealer
* COMPUTER SALES
* COMPUTER REPAIR
* COMPUTER PARTS
* COMPUTER MAINTANACE
15,000/-
17" Monitor - 8,500/-
ஒரு வருட உத்தரவாதம்
Monitor தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
அமெரிக்கா LOTTERY விசா விண்ணப்பிக்க தொடர்பு கொள்க
E-Mail: skymathy@sltnet.lk
(கச்சேரிக்கு அருகில்)

LOGIC
விசேட கருத்தரங்கு
சமூக விஞ்ஞானம்
11.11.2005
வெள்ளி-3.30 P.m.
By. P. கமல்
தொடர்ந்து நான்கு வெள்ளிகள் நடைபெறும்
புதிய யூனிவேசல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811
புதிய பிரிவுகள் ஆரம்பம் :-12.11.2005
Dip. in Microsoft Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Programming
Dip. in Hardware Engineering
Dip. in Network Engineering
Dip. in Visual Basic
Dip. in Computer Science
Dip. in AutoCAD
Dip. in C++
Dip. in Internet E-Mail
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்
இப்பிரிவிற்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

B.Sc. (MATHS)
காமராஜர் பல்கலைக்கழகம் (வெளிவாரி)
* A/L இல் குறைந்த சித்தி எய்தியவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும். இக்கற்கை நெறிக்குரிய விண்ணப்பங்கள் காமராஜர் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளது.
* இவற்றுக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும். விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
குறிப்பு: இவற்றுக்குரிய பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.
(42585)(30-12-16)
யாழ். இணைப்பாளர், S.அருள்நங்கை.
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

IIS
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
விண்ணப்பித்து விட்டீர்களா?
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
விண்ணப்ப முடிவுத்திகதி 20.11.2005
இயக்குநர்
IIS, யாழ்ப்பானம்


### மரண அறிவித்தல்கள்

#### நடராஜா சண்முகராஜா



மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் இராச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சண்முகராஜா (சந்திரா) அவர்கள் நேற்று (09.11.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குகனேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிவதனி (யாழ். பல்கலைக் கழகம், வணிகம்-2000), சிறிகுமரன் (K.K.போன்சொப்), கோவைக்குமரன் (கொழும்பு, தேசிய வைத்தியசாலை, பயிலுநர்), தவக்குமரன் (யாழ். மத்திய கல்லூரி, மாணவன்), சதீஸ்குமரன் (யாழ். இந்துக் கல்லூரி, மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரனின் (கனடா), மாமனாரும், சோதிலிங்கம், தனபாலசிங்கம் (அமரர்) பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2005) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் ஆலடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு.

(அ-45800)(30-12-16)

தகவல்:
குடும்பத்தினர்
குமரன் (மகன்-K.K.போன்சொப்)

#### கணபதி நவரட்ணம் (இராசு)



மானிப்பாய், ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் இல.175, அரசடி வீதி, முதலாம் ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நவரட்ணம் அவர்கள் நேற்று (09.11.2005) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி நாகம்மா தம்பதியரின் மூத்த மகனும், மலரின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, பூவிலிங்கம், மகாலிங்கம் (ஜேர்மனி), சிவலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தெய்வேந்திரம், நல்லம்மா, பசுபதி, நேசமலர் ஆகியோரின் மைத்துனரும், ஜீவரட்ணம், விசுவரட்ணம், சிவமதி, சுகிந்திமதி, ரஞ்சிதமதி, ரஜிதமதி (முதலாம் வருட மாணவி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), பிலேபரட்ணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மெலானி, விமலாதேவி, செல்வராசா (ஈழநாதம் மக்கள் தினசரி), ராஜ்குமார், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கெற்சிகா, நிலாவரசி, டென்சிகா, டெலக்கிகா, டேலக்சீன், துஸ்யந்தன், சாருஜா, ராகுலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.175, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(42638)(30-12-16)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.